விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 22 வியாழக்கிழமை (07.07.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 200

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து



## தமிழ்ப் பேரறிஞர் பேராசிரியர் சிவத்தம்பி காலமானார்

(கொழும்பு)

முதுபெரும் தமிழ் பேரறிஞரும் வாழ்நாள் பேராசிரியருமான கார்த்திகேசு சிவத்தம்பி நேற்று இரவு 8.30 மணியளவில் கொழும்பில் காலமானார். அவருக்கு வயது 79.

1932ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி கரவெட்டியில் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை கொழும்பு சாகிராக் கல்லூரியிலும் கற்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டத்தையும் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்ட அவர், கலாநிதிப் பட்டத்தை ஐக்கிய ராச்சியத்திலுள்ள பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர் சிவத்தம்பி இங்கிலாந்து, இந்தியா, ஜேர்மனி போன்ற பல்வேறு நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களிலும் வருகை பேராசிரியராக பணியாற்றியிருந்தார்.

பல்கலைக்கழகவிரிவுரையாளராகப்பணியாற்றுவதற்கு முன் ஆசிரியராகவும், பத்திரிகைத் துறையிலும், நாடாளுமன்றத்திலும் கடமையாற்றியிருந்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவம் தடையாக இருந்தால்

# ஜனநாயக வழியில் போராடுவோம்

## பான் கீ மூனுடன் ரணில் சந்திப்பு; சவேந்திர சில்வாவும் பங்கேற்பு


### புகைப்படம் எடுக்க அனுமதி மறுப்பு

(நியூயோர்க்)

எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

நியூயோர்க்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐக்கிய நாடுகள் சபைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவும் கலந்து கொண்டதாக தெரிய வருகின்றது.

அத்துடன் இச்சந்திப்பின் போது புகைப்படம் எடுப் (20ஆம் பக்கம் பார்க்க)




## கூட்டமைப்பு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜனநாயக முறையிலான தேர்தலுக்கு இராணுவத்தினர் தடையாக இருப்பார்களாயின் ஜனநாயக வழியில் போராட தயாராக இருக்கிறோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்தவை சந்திக்க பாகிஸ்தான் பிரதமர் விருப்பம்



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் டி.எம்.ஜயரட்ன ஆகியோரை பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி அழைப்பு விடுத்துள்ளார் என ஏ.பி.பி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தலைமையிலான குழு இஸ்லாமாபாத்தில் உள்ள பாகிஸ்தான் பிரதமரின் இல்லத்தில் அவரை சந்தித்த போதே பாகிஸ்தான் பிரதமர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் (20ஆம் பக்கம் பார்க்க)

## கடற்தொழிலாளர்களுக்கான பாஸ் நடைமுறை இன்றுமுதல் நீக்கம்

(கொழும்பு)

கடற்றொழிலாளர்களுக்கான பாஸ் நடைமுறைகள் இன்று முதல் நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு பல்வேறு வழிவகைகளில் செயற்படுத்தப்பட்டு வரும் அனுமதி (பாஸ்) நடைமுறைகளை நீக்கக் கோரி யாழ்.குடாநாட்டிலுள்ள பல்வேறு கடற்றொழிலாளர் சங்கங்களும், சம்மேளனமும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பல கோரிக்கையை முன்வைத்திருந்தன.

இந் நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி, அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கிழக்கு மாகாண ஆளுநர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம, மற்றும் கடற்படைத் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் கொலைக்களம் உண்மையானது

### அரசின் விமர்சனத்திற்கு சனல் 4 பதில்

(நியூயோர்க்)

சனல் 4 தொலைக்காட்சியால் அண்மையில் ஒளிபரப்பப்பட்ட இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப்படம் போலியானது என அரசாங்கம் அறிவித்துள்ளதை சனல் 4 வன்மையாக மறுத்துள்ளது.

நாம் நேர்மையான ஊடகப் பணியில் உள்ளோம். எமது தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட ஆவணப்படம் சோடிக்கப்பட்ட ஒன்றென்ற குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ள முடியாதது என சனல் 4 விசனம் தெரிவித்துள்ளது.

படைத்தரப்பினரால் பொதுமக்கள் ஒருவரும் கொல்லப்படவில்லை என அரசாங்கம் தொடர்ந்து கூறிவருகின்றது.

படைத்தரப்பினர் அரசியல் கைதிகளைக் கூட்டாக படுகொலை செய்த சனல் 4 ஒளிபரப்பிய காட்சிகள் போலியானவை எனவும் படையினரின் சீருடைகளை அணிந்து விடுதலைப்புலிகளே இப் படுகொலைகளை மேற்கொண்டனர் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இக் கூற்றினை வன்மையாக மறுத்துள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

## லியம் பொக்ஸ் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

பிரித்தானிய பாதுகாப்புச் செயலாளர் லியம் பொக்ஸ் எதிர்வரும் சனிக்கிழமை இலங்கை வரவுள்ளதாக கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் நேற்று புதன்கிழமை தெரிவித்தது.

இலங்கை வரும் லியம் பொக்ஸ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சர்வதேச நீதிமன்றுக்கு இலங்கை இழுக்கப்படலாம்

## மங்கள சமரவீர ஆருடம்

(கொழும்பு)

யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதவுரிமை மீறல் குற்றச்சாட்டுகள் காரணமாக இவ்வருட இறுதிக்குள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இலங்கை இழுக்கப்படும் வாய்ப்பு உள்ளதாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்குற்றச்சாட்டுகள் தொடர்பாக முறையான விசாரணை நடத்துவதற்குப் பதிலாக அரசாங்கம் பரிகசிப்பிற்கிடமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மங்கள சமரவீர எம்.பி. குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்தபோது சர்வதேச குற்றவியல் நீதிமன்ற சாசனத்தில் கையெழுத்திடாததன் காரணமாகவே அரசாங்கம் இதுவரை பாதுகாப்பானதாக இருக்கின்றது. இதனால் அவருக்கு அரசாங்கம் நன்றியுடையதாக இருக்க வேண்டும் என மங்கள சமரவீர கூறினார்.

அதேவேளை சர்வதேச குற்றவியல் நீதிமன்ற சாசனத்தில் இலங்கை கையெழுத்திடாத போதிலும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் சிபார்சின் மூலம் அந்நீதிமன்றத்திற்கு இலங்கை இழுக்கப்படலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-8)

## புலமைப் பரிசில் பரீட்சை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சைக்கான இலவசக் கருத்தரங்கு நிகழ்வானது இன்று 7ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யா/சென்.மேரிஸ் வித்தியாலயம், யா/இந்துக் கல்லூரி, யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## பலாலி விமான நிலையம் விரைவில் மக்கள் பாவனைக்கு

பலாலி விமான நிலையம் விரைவில் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்படும் என யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்துள்ள தென்னிலங்கை ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவ[illegible]தனைத் தெரிவித்தார். இது பற்றி அ[illegible]லும் தகவல் தருகையில்,

இந்திய உதவி[illegible]லாலி விமான நிலையத்தில் மேற்கொள்ள[illegible]ட்டுவரும் புனரமைப்புப் பணிகள் முடிவுறு[illegible]றுவாயில் உள்ளன. இந்த விமான நிலையத்திற்கு வரும் பொதுமக்களின் நன்மை கருதி காங்கேசன்துறை - பருத்தித்துறை மற்றும் பலாலி ஆகிய பிரதேசங்களில் உள்ள வீதிகள் காப்பெற் வீதிகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

அதேபோன்று ஏ-9 வீதியும் நான்கு பிரிவுகளைக் கொண்டதாக மாற்றப்பட்டு வருகின்றது. புனரமைப்பு நடவடிக்கைகள் முடிவுறும் தறுவாயில் உள்ள பலாலி - அச்சுவேலி மற்றும் தொண்டைமானாறு வீதிகள் இந்த வார இறுதியில் திறந்து வைக்கப்படவுள்ளன.

இதன்காரணமாக இப்பிரதேச மாணவர்களும் பொதுமக்களும் பெரும் நன்மையடைவார்கள் என்றும் கட்டளைத் தளபதி கூறினார். (எ-8)

## பேராசிரியர் சிவத்தம்பியின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு பேரிழப்பு

### பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை இரங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியராக இருந்த கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை விடுத்த அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த செய்தியில்;பேராசிரியர் சிவத்தம்பியின் தமிழ்ப் புலமை இலங்கை, இந்தியா மாத்திரமில்லாமல் சர்வதேச புகழ் பெற்றிருந்தது. இவர் பழந்தமிழ் இலக்கியத்திலும், நவீன இலக்கியத்திலும், நாடகத்துறையிலும் திறனாய்வு, மொழிபெயர்ப்பு மற்றும் நுண்கலைத்துறையிலும் மிகச்சிறந்த புலமை பெற்றவராகத் திகழ்ந்தார். அவர் ஒரு தமிழ் தூதுவராக அமெரிக்கா, கனடா, சுவீடன், ஜேர்மனி, ரஷ்யா மற்றும் பல நாடுகளுக்கு சென்று தமிழின் தொன்மையையும் இலக்கியத்தின் பெருமையினையும் மிகவும் சிறப்பாக எடுத்துரைத்து வந்தார். அவரின் மறைவு தமிழ் மக்களுக்கு மாத்திரம் அன்றி தென்னாசிய மொழிகளின் ஒப்பீட்டு ஆய்வுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## காரைநகரிலிருந்து கொழும்புக்கு தினமும் பஸ் சேவையினை நடத்துவதற்கு ஏற்பாடு

காரைநகரிலிருந்து கொழும்பிற்கு சேவையினை மேற்கொள்வதற்கென காரைநகர் பஸ் டிப்போவுக்கு இரண்டு பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன. ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் போக்குவரத்து அமைச்சரைச் சந்தித்து கேட்டுக்கொண்டதற்கிணங்கவே இந்த பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

காரைநகர் பஸ் டிப்போவுக்கு நேற்று விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் இந்த பஸ்களைப் பார்வையிட்டதுடன் இந்த சேவை குறித்து கேட்டறிந்துகொண்டார். காரைநகரிலிருந்து நாள்தோறும் கொழும்புக்கு இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. இந்த பஸ்களில் பயணிக்க விரும்புகின்றவர்கள் காரைநகர் பஸ் டிப்போவுடன் தொடர்புகொண்டு பயண அனுமதியினை பெற முடியும் என்று பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

காரைநகர் பஸ் டிப்போவுக்கு மேலும் 4 பஸ்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஏ)

## வாகன சேவைக்கு விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கடமைகளுக்காக 28 கயஸ் வாகனங்கள் தேவைப்படுவதால் இவற்றினை வழங்கக்கூடிய வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாக கிளிநொச்சி அரச அதிபர் அறிவித்துள்ளார். இவ்வாகனங்களுக்கு கிலோமீற்றருக்கான கொடுப்பனவு 46 ரூபா வீதம் வழங்கப்படும் எனவும் 21.07.2011 தொடக்கம் 24.07.2011 வரை சேவையில் ஈடுபடுதல் வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை நாளை மறுதினம் 9-ம் திகதிக்கு கிளிநொச்சி செயலகத்தில் நேரடியாகச் சமர்ப்பிக்குமாறு அறிவித்துள்ளார். விண்ணப்பிக்கும் போது வாகனப் பதிவுப் புத்தகப் பிரதி-02, வாகன வரி அனுமதிப் பத்திரப் பிரதி-02, வாகனக் காப்புறுதிப் பிரதி-02, வாகன சாரதி அனுமதிப் பத்திரப் பிரதி-02, சாரதியின் தேசிய அடை யாள அட்டைப் பிரதி-02 ஆகியன சமர்ப்பிக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0212285352 என்ற இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளலாம் எனவும் கிளிநொச்சி அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஏ)

## இலக்கணத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா

ஏ.கே.கீர்த்திராஜன் எழுதிய தமிழ் இலக் கணத் தொகுப்பு நூலின் அறிமுக விழா எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவன் தெ.கர்ஷன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட கணக்கியல்துறைத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி பிரதம விருந்தினராகவும் யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன், யாழ்.நாவலர் கல்வி நிலைய இயக்குநர் சி.குணாளன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் நூலின் வெளியீட்டுரையை ஆற்றவுள்ளார்.

## சிறிய, நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கான புதிய சங்கம் அங்குரார்ப்பணம்

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை யாழ்.மாவட்டத்தின் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிலாளர்களின் எதிர்கால தொழில் மேம்பாட்டிற்கான செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக சிறிய நடுத்தரக் கைத்தொழிலாளர்களுக்கான சங்கங்களைப் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அமைக்கவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் பிரதேச செயலர் தலைமையில் மேற்படி சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. எனவே மேற்படி செயலகப் பிரிவுக்குட்பட்ட அனைத்து சிறிய, நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள் மற்றும் திவி நகும திட்டத்தில் கைத்தொழில் துறையில் தெரிவான பயனாளிகளும் பங்குகொண்டு அங்கத்தவராகிப் பயனடையுமாறு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்டக் காரியாலயம் கேட்டுக்கொள்கின்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, மத்திய வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறுதொழில் முயற்சிக்காக தாம் வழங்கும் விசேட தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளனர். (ஸ்ரீ-2)


**வாடகை விடப்படும்**

யாழ்.கந்தர்மடம் பலாலி வீதியில் 7 அறைகள், கோல், வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், NGOS விரும்பப்படும்.

தொடர்பு:- 0772850753

(5304)

**மனோதத்துவ வைத்தியம்**

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

05.07.2011 முதல் 10.07.2011 வரை உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள்,வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ஞரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.

(C-3619)

**அடகு நகை மீட்க அரிய சந்தர்ப்பம்**

அடகு வைத்துள்ள உங்கள் நகைகளை இடம் மாற்றி வைப்பதற்கு, கூடிய தொகைக்கு மீள வைப்பதற்கு அல்லது மீட்டு விற்பதற்கு நாங்கள் உதவுவோம்.

(சேவைக் கட்டணம் 2% அறவிடப்படும்)

உடனே அழையுங்கள் CALL NOW 0774050936

# இன்று ஒரு தகவல்

## மூன்று குருமார்கள்

ஓர் ஊரில் ஒருவர் இருந்தார். அவர் சூபி ஞானி, பெயர் ஹாசன். அவருக்கு மிகவும் வயதாகிவிட்டது. அவருடைய முதுமைக் காலத்தில் அவரிடம் சிலர் வந்தார்கள்.

ஞானியிடம் பேசிக் கொண்டிருந்த போது அவர்கள், "உங்கள் குரு யார்?" என்று கேட்டார்கள்.

ஞானி நிமிர்ந்து உட்கார்ந்து, "எனக்கு ஆயிரக்கணக்கான குருமார்கள்உண்டு... அவர்கள் எல்லோரையும் பற்றி நான் சொல்வதென்றால் காலம் போதாது. ஆனால் முக்கியமான மூன்று பேரைப் பற்றி மட்டும் நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.

மேற்கொண்டு அவர் சொல்ல ஆரம்பித்தார்.

அந்த மூன்று பேர்களில் ஒருவன்–ஒரு திருடன்.

நான் ஒரு சமயம் ஒரு பாலைவனம் வழியாகச் சென்று கொண்டிருந்தேன்.

அப்போது வழி தவறி ஒரு கிராமத்திற்குச் சென்று விட்டேன்.

அது இருட்டு நேரம். நடுராத்திரி. ஊரே உறங்கிப் போயிருந்தது.

அந்த நேரத்தில் ஒரு ஆள் மட்டும் ஒரு வீட்டுச் சுவற்றில் ஏதோ செய்து... உள்ளே நுழைய முயற்சி செய்து கொண்டிருந்தான்.

நான் அவனிடம் சென்று, "நான் இன்றைக்கு இந்தக் கிராமத்தில் எங்கே தங்க முடியும்" என்று கேட்டேன்.

அதற்கு அவன்," இந்த ராத்திரி வேளையில் அது மிகவும் சிரமம்... ஒரு திருடனோடு உங்களால் தங்க முடியுமானால் நீங்கள் என்னோடு தங்கலாம்!" என்றான்.

நான் அவனுடன் ஒரு மாதம் தங்கியிருந்தேன்.

ஒவ்வொரு நாள் இரவும் அவன், "இப்போது நான் என்னுடைய வேலைக்குப் போகிறேன். நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்!" என்று கூறிவிட்டுச் செல்வான்.

அவன் திரும்பி வந்ததும், " இன்றைக்கு உனக்கு ஏதாவது கிடைத்ததா?" என்று கேட்பேன்.

இதற்கு அவன்," இன்றிரவு ஒன்றும் கிடைக்கவில்லை. நாளைக்கு மறுபடியும் முயற்சி செய்வேன்!" என்று சொல்வான்.

அவன் ஒரு போதும் நம்பிக்கை இழந்ததே கிடையாது எப்போதும் மகிழ்ச்சியாகவே இருந்தான் . நானும் நீண்ட காலமாக தியானம் செய்து கொண்டே இருந்தேன்... ஆனால் ஒன்றுமே நடைபெறவில்லை. அதனால் நான் என்ன செய்தேன் தெரியுமா? மனம் வருந்தினேன்... நம்பிக்கை இழந்து விடுவேன். அதுபோன்ற சமயங்களிளெல்லாம் அந்தத் திருடனுடைய விடா முயற்சி தான் என் நினைவுக்கு வரும்.

என்னுடைய இரண்டாவது குரு– ஒரு நாய்.

ஒரு சமயம் எனக்கு மிகவும் தாகமாக இருந்தது...

ஒரு நதியை நோக்கிப் போய் கொண்டிருந்தேன்.

அப்போது அங்கு ஒரு நாயும் வந்தது. அதற்கும் தாகம். அது ஓடி வந்து ஆற்றைப் பார்த்தது. நாயின் நிழல் ஆற்றில் தெரிந்தது. அதைப் பார்த்து நாய் பயந்து விட்டது. அதாவது, அது தன் சொந்த உருவத்தையே கண்டு பயந்தது... அதைப் பார்த்துக் குரைத்தது... திரும்பி ஓடியது... ஆனாலும் அதற்குத் தாகம் அதிகமாக இருந்ததால் அது மறுபடியும் திரும்பி வந்தது... இப்படி சில தடவை செய்தது...இருந்தாலும் கடைசியில் இது தண்ணீரில் குதித்தது. அப்படி குதித்தவுடனே அதனுடைய உருவம் மறைந்து விட்டது.

அதைப் பார்த்து நான் என்ன புரிந்து கொண்டேன் தெரியுமா?

"எவ்வளவு தான் பயம் இருந்தாலும் கூட ஒருவன் தைரியமாகக் காரியத்தில் இறங்க வேண்டும் "என்று புரிந்து கொண்டேன்.

இந்தப் போதனை எனக்கு அந்த நாயிடமிருந்து கிடைத்தது!

என்னுடைய மூன்றாவது குரு– ஒரு சின்னக் குழந்தை.

நான் ஒரு சமயம் ஒரு நகரத்திற்குச் சென்றேன்.

அங்கு ஒரு குழந்தை எரிந்து கொண்டிருந்த ஒரு மெழுகு வர்த்தியை எடுத்துக் கொண்டு வந்தது.

நான் அந்தக் குழந்தையிடம் வேடிக்கையாக, "பாப்பா! இந்த மெழுகுவர்த்தியை நீயாகவே கொளுத்தினாயா?" என்று கேட்டேன்.

அதற்கு, "ஆமாம்!" என்று குழந்தை பதில் கூறியது.

சரி... இந்த மெழுகுவர்த்தி இதற்கு முன்பு எரியாமல் இருந்தது... இப்போது எரிகிறது... இந்த மெழுகுவர்த்திக்கு வெளிச்சம் எங்கிருந்து வந்தது என்று எனக்குக் காட்ட முடியுமா? என்று வினவினேன். அதற்கு அந்தக் குழந்தை சிரித்தபடியே மெழுகு வர்த்தியை ஊதி அணைத்துவிட்டு இப்போது இந்த மெழுகு வர்த்தியின் வெளிச்சம் போனதைப் பார்த்தீர்கள். அது எங்கே போயிற்று.எனக்குச் சொல்லுங்கள்! என்று என்னிடம் கேட்டது.

அந்தக் குழந்தை அப்படிக் கேட்டதும் என்னிடமிருந்த ஆணவம் அழிந்து போயிற்று. நான் படித்ததெல்லாம் இந்த விநாடியிலேயே சுக்கு நூறாகி விட்டது. என்னுடைய முட்டாள் தனத்தை நான் உணர்ந்தேன்!

மேற்கூறிய விபரங்களை அந்த ஞானி தன்னிடம் வந்தவர்களுக்கு விளக்கமாகக் கூறினார்.

அதனால் நாம் இன்னாரிடமிருந்துதான் இதைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதில்லை. யாரிடமிருந்தும் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய எதையும் கற்றுக் கொள்ளலாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் போன்ற பயிற்சி நிலையங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 4 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

அத்தோடு விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 தொடக்கம் 25 வயத்திற்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் முழுப்பெயர், முகவரி, பிறந்ததிகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், பயிலவிரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு அதனை பூர்த்தி செய்து மாவட்ட முகாமையாளர், NAITA, இல.7 கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கைநெறி (NC ICT) இற்கான விண்ணப்பம் என எழுதப்பட்டிருத்தல் வேண்டுமென மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## கண்டி இசைநடன கல்லூரிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கும் கண்டி இசைநடன கல்லூரியில் இணைந்து பயிற்சி பெற விரும்பும் இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்த 18 இற்கும் 23 வயதிற்கும் இடைப்பட்ட இத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர்கள்,யுவதிகள் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் உதவி இயக்குநர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்ட அலுவலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தமது விண்ணப்பப்படிவங்கைள அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ)

## கடவுச்சீட்டை சட்டவிரோதமாக மாற்றியமைத்த நபர் கைது

கடவுச்சீட்டை சட்டவிரோதமாக மாற்றியமைத்த நபர் ஒருவர் இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசாரணைப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.மருதானை பிரதேசத்தில் உள்ள வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றில் பணியாற்றும் சந்தேக நபர் குறித்த கடவுச்சீட்டின் விபரங்கள் மற்றும் புகைப்படத்தை மாற்றியுள்ளார். இரண்டு பெண்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனுப்பி வைக்க அனுமதி பெற்றுக் கொள்வதற்காக சந்தேக நபர் கடவுச்சீட்டில் மாற்றங்களை செய்துள்ளார்.புலத் கொல்பிட்டிய, ராகம பிரதேசங்களை சேர்ந்த இரண்டு பெண்களின் கடவுச் சீட்டுக்களே இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 60 |
| தக்காளி | 40 | 50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 70 | 80 | 60 |
| கரட் | 60 | 70 | 80 |
| பூசணி | 25 | 40 | 25 |
| புடோல் | 40 | 40 | 35 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 180 | 120 | 150 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 60 |
| பாகற்காய் | 100 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | -- |
| பயற்றங்காய் | 130 | 120 | 70 |
| லீக்ஸ் | 50 | 60 | 60 |
| பீற்றூட் | 60 | 80 | 50 |
| கறிமிளகாய் | 60 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 200 |
| போஞ்சி | -- | 140 | 140 |
| கத்தரிதம்புள்ள | -- | 20 | 30 |
| கீரை - 1 பிடி | 8-10 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 45 |

## இராசி பலன்

07.07.2011
(ஆனி 22, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6 மணிக்கு
சப்தமி பின்னிரவு 2.33 மணி வரை
உத்தரம் மாலை 5.53 மணிவரை
இராகுகாலம் 1.28-2.58 மணி வரை
சுபநேரம் 7.28-8.58 மணிவரை
ஆனி உத்தர தரிசனம்

**மேடம்** உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், விருந்து விழாக்களில் கலந்து மகிழ்வீர்கள், தொழிலில் இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், உ[illegible]ல் நலம் சீராகும்.

**இடபம்** எதிர்க[illegible] குறித்து முக்கிய முடி[illegible]பீர்கள், விருந்தினரை [illegible]ற்று வியப்படையும் நா[illegible] புத்திரர் வழியில் பெருமை[illegible]டைவீர்கள்.

**மிதுனம்** உஷ்ண ரே[illegible] நிலையுண்டு, நண்பர்கள் மத்தியில் நற்பெயர் கிடைக்கும், பெற்றோர் வழியில் எதிர்பார்த்த தகவல் வந்து சேரும், வாகன பழுதுச் செலவுகள் குறையும்.

**கடகம்** பெரியோர்களின் ஆசி கிடைக்கும், தொழில் வளம் பெருக தொல்லை தந்தவர்களே உதவிபுரிவர், சகோதர ஒற்றுமை பலப்படும், பிரயாண நன்மையுண்டு

**சிங்கம்** சிறப்பான நாள், பொருளாதார வளர்ச்சி கூடும், சுப செய்தியொன்று சுற்றத்தார் மூலம் வந்து சேரும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், புத்திசாதூரியத்தால் காரியம் சாதிப்பீர்கள்.

**கன்னி** சிந்தனை மிகுதியுண்டு,வேலைச் சுமை குறையும், உடல்நலம் சீராகும், மாலையில் திடீர் பயணம் உருவாகலாம், பெரிய மனிதரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** சுப விரயம் ஏற்படும் நாள், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் தோன்றும் பயணத்தால் பிரபலமானவரின் சந்திப்பு உண்டு.

**விருச்சிகம்** உறவினர் பகை அகலும், எடுத்த காரியங்கள் தடையின்றி நிறைவேறும், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** செல்வாக்கை காப்பாற்றி உறவினரின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வெளியூர்த் தொடர்பால் மதிப்பும் மரியாதையும் உயரும், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**மகரம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், தேகநலனில் தெளிவு பிறக்கும், தொழில் விருத்தியுண்டு, திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** சிவாலய வழிபாட்டால் சிறப்புகளைக் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, நண்பர்களுடன் மனம்கோணாது நடப்பது நல்லது, பிரயாண பயமுண்டு.

**மீனம்** களஸ்திர நன்மையுண்டு, உறவினரின் பாராட்டைப் பெறுவீர்கள், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், உடல் நலம் உற்சாகமளிக்கும், வரவு திருப்தி தரும்.

வளவன்

# சிவத்தமிழ்ச் செல்வியின் மூன்றாவது குருபூசை வைபவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான முன்னாள் பெருந்தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் மூன்றாவது குருபூசை வைபவம் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் காலை 9 மணிக்கு ஆலயத்தில் விசேட பூசை,அன்னையின் நினைவாலயத்தில் வழிபாடு, அன்னையின் உருவச்சிலை வழிபாடு, திருமுறை மண்டபத்தில் விசேட பூசைவழிபாடு, திருமுறைப்பாராயணம், சிறப்பு நிகழ்ச்சிகளை தொடர்ந்து காலை 10.50 மணிக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

முற்பகல் 11 மணிக்கு திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய மூன்றாம் திருமுறை மலர் வெளியீடு இடம்பெறவுள்ளது.

இதில் முதற் பிரதியை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான உப தலைவர் ச.ஆறுமுகநாதன் பெற்றுக் கொள்வார். வெளியீட்டுரையை இணுவில் மத்திய கல்லூரி இளைப்பாறிய அதிபர் சி.திருஞானசம்பந்தப்பிள்ளை நிகழ்த்துவார்.

(ஸ்ரீ)

# "இளைஞர்களுக்கான ஆன்மீக சிந்தனை" சர்வமத கருத்தரங்கு நாளை

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகம் நடத்தும் **இளைஞர்களுக்கான ஆன்மீக சிந்தனை** எனும் தலைப்பிலான சர்வமத கருத்தரங்கு நாளை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண நாவலர் கலாசார மண்டபத்தில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ் .மாவட்ட உதவி இயக்குநர் த.ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவும் சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வடமாகாணப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீஸ்காந்தரூபனும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் சர்வமத தலைவர்களும் கலந்து கொண்டு ஆசியுரையை வழங்குவதுடன் சிறப்புரையினை ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர் ஆறு.திருமுகன், பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் சகோதரி ராதே ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஸ்ரீ)

## நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

காப்புறுதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் இரு நபர்கள் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த [illegible]ழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்[illegible]ஜா குறித்த இரு நபர்களும் மன்றில் கா[illegible]திப்பத்திரத்தை சமர்ப்பித்தமையால் [illegible]சலவாக தலா 1500 ரூபா அபராதம் [illegible]தித்து தீர்ப்பளித்தார்.

(ஸ்ரீ-3)

*****

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

(ஸ்ரீ-3)

## மாணவர்களுக்கான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வார நிகழ்வை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேசசபையின் மிருசுவில் பொது நூலகத்தில் மாணவர்களிற்கான போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் இன்று முன்பள்ளி மாணவர்களிற்கு பாட்டு,வர்ணம் தீட்டுதல், சொல்வளம் ஆகிய போட்டிகள் நூல்நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக நூலகர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ)

# வீதியால் நடந்து சென்ற மாணவனின் கைத்தொலைபேசி அபகரிப்பு

(பருத்தித்துறை)

வீதியால் நடந்து சென்ற உயர்தர வகுப்பு மாணவர் ஒருவரின் கைத்தொலைபேசியை மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாதோர் பறித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணிக்கு தம்பசிட்டி கதிரவேல் பிள்ளை வீதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த மாணவனை அல்வாய் சாவலடி சந்தியிலிருந்து பின்தொடர்ந்து சென்ற முகமூடி அணிந்த நபர்கள் தருணம் பார்த்து வழிமறித்து குறித்த மாணவரிடம பணம் இருக்கிறதா எனக் கேட்டு தாக்கியுள்ளனர். பணம் இல்லையென்பதை அறிந்து கொண்ட வழிப்பறி கொள்ளையர்கள் மாணவனின் கைத்தொலைபேசியை பறித்துச் சென்றுள்ளனர்.

(ஸ்ரீ-10)

## சேவை நலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அதிபர் திருமதி. சிவமலர் அனந்தசயனனின் சேவை நலன் பாராட்டு விழா நாளை காலை 8 மணிக்கு பாவலர் துரையப்பாபிள்ளை கேட்போர் கூடத்தில் பிரதி அதிபர் சு.சயந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவு தொடரில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் காயத்திரி மந்திரத்தின் மகிமை என்னும் விடயம் பற்றி இளைப்பாறிய ஆசிரியர் கே.சி.தங்கராசா ஆன்மீக சொற்பொழி வாற்றவுள்ளார். (ஸ்ரீ-35)

*****

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை காலை 10.30 மணிக்கு பக்தியின் மகத்துவம் என்னும் விடயம் பற்றி யாழ்.சிந்மய நிறுவனத்தின் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமி ஆன்மீக சொற்பொழி வாற்றவுள்ளார்.

(ஸ்ரீ-35)

# பாடசாலை கட்டட புனரமைப்பிற்கு 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கட்டடங்களை புனரமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் விரைவில் முன்னெடுக்கப்படும் என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

மேற்படி பாடசாலைக்கு புதிதாக அமைக்கப்பட்ட கேட்போர் கூடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்ட்டது.

இதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தின் கல்விவளர்ச்சி மீது எனக்கு அதிக ஆர்வம் உண்டு. இதனால் இப்பாடசாலையில் புனரமைக்கப்படாத கட்டடத்தை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு புனரமைப்புச் செய்ய 3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந் நிதிமூலம் இம் மகாவித்தியாலயத்துக்குரிய கலையரங்கத்தினை புனரமைக்க கல்வியமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இவற்றினைப் புனரமைப்பதற்கு நிதி மதிப்பீடு ஒன்றைச் ஒழுங்கு செய்து தருமாறு பாடசாலைச் சமூகத்தை அவர் கேட்டுக் கொண்டார்.

அத்தோடு இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களிடமிருந்து சிறந்த கல்விப் பெறுபேற்றை எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2-4)

## இலவசத் தொழிற்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

சைவ வித்தியா விருத்திச் சங்க க.பொ.த சாதாரணதரத்தில் சித்தியடைந்த ஆண், பெண் இருபாலாருக்குமான மின் இணைப்பு தொழிற்பயிற்சியை இலவசமாக நடத்த முன்வந்துள்ளது.

இப்பயிற்சியை கற்க விரும்புவோர் கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள பணிமனைக்கு நேரில் வருமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)





வடமாகாணத்தில் என்றிப் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஆளுநர் பணிமனையில் நடைபெற்றது. இதில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# வள்ளிபுனம் மற்றும் தேவிபுரம் கிராம மக்கள் நாளை மறுதினம் மீள்குடியேற்றம்

## முல்லைத்தீவு அரச அதிபர் அறிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வள்ளிபுனம், தேவிபுரம் ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடத்திற்கு மீள்குடியேற்றப்படவுள்ளதாக முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் அ.பத்திநாதன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய தமது நண்பர்கள், உறவினர்களுடன் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு வள்ளிபுனம் அ.த.க. பாடசாலைக்கு மீள்குடியேறக் கூடிய ஆயத்தங்களுடன் சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் தாங்கள் இதுவரை காலமும் தங்கியிருந்த கிராமசேவையாளர் பிரிவிலுள்ள கிராமசேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அப்பகுதி உதவி அரசாங்க அதிபரினால் ஒப்பமிடப்பட்ட விடுவிப்பு கடிதம் சமர்ப்பித்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மீளெழுச்சித் திட்டத்தின் கீழ்

## கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவியாக

# 3 கோடி ரூபாவும் உட்கட்டமைப்புக்கு 12 கோடி ரூபாவும் ஒதுக்கீடு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மக்களின் வாழ்வாதார உதவிச் செயற்பாட்டிற்கு 3 கோடியே 4 இலட்சத்து 74 ஆயிரத்து எண்ணூற்று இருபத்தாறு ரூபாவும் கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு 12 கோடியே 67 இலட்சத்து 98 ஆயிரத்து நானூறு ரூபாவும் பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமாரால் வழங்கப்பட்டது.

இதில் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் ஏ, முழங்காவில் மேற்கு பி, கிராஞ்சி, கரியாலை நாகபடுவான் ஏ, குமுழமுனை பி, நாச்சிக்குடா, மாதிரி கிராமம், சோலை, ஜெயபுரம் வடக்கு, ஜெயபுரம் தெற்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 323 பயனாளிகளுக்கு கடந்த யூன் மாதம் 29 ஆம் திகதி வாழ்வாதார உதவிச் செயற்பாட்டிற்கு 95 இலட்சத்து 16 ஆயிரத்து அறுநூறு ரூபாவும் உட் கட்டமைப்பு வசதிகளுக்கு 236 இலட்சத்து 47 ஆயிரத்து இருநூறு ரூபாவும் வழங்கப்பட்டது. கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜெயந்திநகர், சிவநகர் ஆகிய கிராமங்களிலுள்ள 66 பயனாளிகளுக்கு கடந்த 21 ஆம் திகதி ஜெயந்தி நகரில் வைத்து வாழ்வாதார உதவி செயற்பாட்டிற்கு 18 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாவும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு 78 இலட்சத்து 68 ஆயிரத்து 400 ரூபாவும் வழங்கப்பட்டது.

கந்தபுரம் மேற்கு, விநாயகர் குடியிருப்பு, கோணாவில், யூனியன் குளம், அக்கராயன்குளம், கெங்காதரன் குடியிருப்பு ஆகிய கிராமங்களிலுள்ள 179 பயனாளிகளுக்கு கடந்த 5 ஆம் திகதி வாழ்வாதார உதவிச் செயற்பாட்டிற்கு 47 இலட்சத்து 69 ஆயிரத்து ஐநூற்று இருபத்தாறு ரூபரவும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு 262 இலட்சத்து முப்பதாறாயிரத்து எண்ணூறு ரூபாவும் வழங்கப்பட்டது.

அத்தோடு அதே பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அம்பாள்குளம், ஆனந்தநகர், மலையாளபுரம் தெற்கு, மலையாளபுரம் வடக்கு, கிருஸ்ணபுரம், உருத்திரபுரம் மேற்கு, குஞ்சுப்பரந்தன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 176 பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாழ்வாதார உதவிச் செயற்பாட்டிற்கு 48 இலட்சத்து இருபத்தொராயிரத்து எழுநூற்று அறுபது ரூபாவும் கிராம உட்கட்டமைப்பு வசதிகளுக்கு 2 கோடியே 31 இலட்சத்து இருபத்தாறாயிரத்து நானூறு ரூபாவும் வழங்கப்பட்டது. கண்டாவளை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த நாகேந்திரபுரம், களவெட்டித்திடல், குமாரபுரம், நாதன் குடியிருப்பு, புன்னை நீராவி, உழவனூர், கட்டைக்காடு, தர்மபுரம் மேற்கு, முரசுமோட்டை, மயில்வாகனபுரம், ஆகியகிராமங்களைச் சேர்ந்த 246 பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாழ்வாதார உதவிச் செயற்பாட்டிற்கு 64 இலட்சத்து 74 ஆயிரத்து நூற்று அறுபது ரூபாவும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு 2 கோடியே 97 இலட்சத்து இருபதாயிரத்து நானூறு ரூபாவும் வழங்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இயக்கச்சி, கோவில் வயல் முள்ளையடி, வண்ணாங்கேணி வடக்கு, தம்பகாமம், சோரன் பற்று, மாசார், புலோப்பளை மேற்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 118 பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வாழ்வாதார உதவிச் செயற்பாட்டிற்கு 30 இலட்சத்து 39 ஆயிரத்து எழுநூற்று எண்பது ரூபாவும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஒருகோடியே 61 இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து இருநூறு ரூபாவும் வழங்கப்பட்டது. (ஸ்ரீ-3)

# வடக்கின் உள்ளூராட்சி தேர்தலில் வெற்றிபெற அரசு பகீரத பிரயத்தனம்

(கொழும்பு)

வடக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் எவ்வழியிலேயேனும் வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அரசாங்கத்தினால் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கான செயற்திட்டம் குறித்து ஆராய்வதற்காக அண்மையில் அரசாங்கத்தின் உயர்மட்ட முக்கியஸ்தர்களின் கலந்துரையாடலொன்று அலரி மாளிகையில் நடைபெற்றிருந்தது.

எவ்வழியிலாவது எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களின் மூலம் வடக்கு மக்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாக சர்வதேசத்துக்குக் காட்டக் கூடிய சாதகமான தேர்தல் பெறுபேறொன்றை வடக்கில் பெற்று விட வேண்டும் என்று அரசாங்கம் தீவிர முனைப்புக் காட்டுகின்றது.

அவ்வாறான வெற்றியொன்றின் மூலம் விடுதலைப் புலிகளுடனான யுத்தம் தொடர்பாக அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டு வரும் பெரும்பாலான குற்றச்சாட்டுக்களுக்கு தகுந்த முறையில் பதிலளிக்க முடியும் என்று அரசாங்கத்தின் முக்கியஸ்வர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதன் ஒரு படிமுறையாக அமைச்சர் பசில் ராஜபக்ஷவை வடக்குப் பிரதேசங்களில் கூடுதலாக காலத்தைச் செலவிட வைப்பது தொடர்பாகவும் தேவையேற்பட்டால் சட்ட விரோத ஆயுதக்குழுவொன்றை பயன்படுத்திக் கொள்வது தொடர்பிலும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் கலந்தாலோசித்துள்ளனர்.

அதற்கு மேலதிகமாக எதிர்க்கட்சிகளின் அரசியல் செயற்பாடுகளை முடக்குவது குறித்தும், அதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பிரஸ்தாப கலந்துரையாடலில் கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளதாக அலரி மாளிகைத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

## இரட்டைக் குடியுரிமை பெறாத இலங்கையர்களின் ஓய்வூதியத்தை இரத்து செய்யுமாறு வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

இரட்டை குடியுரிமை பெறாமல் வெளிநாடுகளில் வசித்து வரும் இலங்கையர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்க வேண்டாம் என உத்தரவிடக்கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனசெத பெரமுனவின் தலைவர் பத்தரமுல்லே சீலாரத்ன தேரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இதில் ஓய்வூதிய திணைக்களத்தில் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளனர்.

இரட்டை குடியுரிமை பெறாத 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கை அரசாங்க ஊழியர்கள் வெளிநாடுகளில் இருந்தவாறு ஓய்வூதியம் பெற்று வருவதாக தேரர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுக்கு ஓய்வூதியத்தை வழங்க வருடாந்தம் 3. 5 பில்லியனுக்கு அதிகமான நிதிசெலவிடப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று ஏழாம் திருவிழா

### ஆதரி அம்பிகையே

எங்கும் இருப்பாள் எதிலும் உறைவாள்
எங்கள் மகா சக்தி
தங்கள் குறைகள் சொல்ல வருவாள்
இங்கு பலகோடி
சங்கு முழங்கும்கடல்போல் ஜன
கங்கையும் சங்கமிக்கும்

கா.கார்த்திகா, நல்லூர்

### முன்னுடையாளை முன்னவுள்ளம் முகிழ்க்கும்மே

நன்றியுடையாளைத் தீயதிலாளை நவநாகம்
ஒன்றுடையாளை உமாபதிபாக முடையாளைச்
சென்றடையாத சீருடையாளை மணிபல்லவம்
முன்னுடையாளை முன்னவுள்ளம் முகிழ்க்கும்மே

சிவ.சண்முகவடிவேல், ஏழாலை

### வேண்டும் வரம் தந்தருளும் நாகம்மையே!

கண்டுமொழி பேசிவளர் நயினையிலே
குடிகொண்ட தாயே
கண்டவர் பிரமிக்க நாகபூஷணியாய்
கடல்நடுவே அமர்ந்தவளே
வேண்டிடுவோர்க்கு வேண்டும் வரந்
தந்தருளும் தூயவளே
அண்டினோரை என்றும் ஆதரிக்கும்
என்புருவே அருள் உருவே
பண்டுவனை பின்தொடரும் பாவிகள்நாம்
படுமவதி தனைக்கண்டும்
ஈண்டிங்கு எழுந்தருளும் ஈஸ்வரியே
எம்மேல் இரங்காததேனோ?

கலாபூஷணம் மு.தணிகாசலம், கற்கோவளம்

### "நயினை நாகம்மை பேரருளால்..."

கத்துகடல் முத்தொதுக்கி கனைத்து நின்று
கரை மோதும்
மெய்த்து வளர் புகழ் நயினை நாகம்மை
பேரருளால்
மொய்த்து நின்ற தோசங்கள் அத்தனையும் பொய்யாக்கி
மூத்து நின்ற கன்னியர்க்கும் காளையர்க்கும்மணம் முடித்து
புத்திரரும் பௌத்திரரும் பொலிந்து
மகிழ்ந்து வாழ
உத்தமியாள் பூஷணியாள் உவந்தருளும்
அருள்வேண்டி
எத்தனையோ் கோடி பக்தர் இடர்தாண்டி
வருகின்றார்
எழிலார்ந்த விழாக்கண்டு இணையடிகள்
வணங்குதற்கே!

திருமதி.த.சபாநாதன், நயினாதீவு

உலகளாவிய மற்றும் உள்ளூர் பொதிகள் சேவை
G.T.V.ENTERPRISES (PVT) LTD
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825
(சி-3664)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இந்தியாவில் சுயதொழில் பயிற்சி

## 40 பேர் தெரிவாகினர்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 40 பெண்களுக்கு சேவா எனப்படும் சுயதொழிலில் ஈடுபடும் பெண்களுக்கான அமைப்பின் பங்களிப்புடன் இந்தியாவில் சுயதொழில் பயிற்சி வழங்குவதற்கான தெரிவு இன்று வியாழக்கிழமை மட்டக்களப்பிலுள்ள கிழக்கு மாகாண முதலமைச்சர் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இத்தெரிவினை இலங்கை வந்துள்ள மூன்று பேரை கொண்ட சேவா நிறுவனத்தின் தூதுக்குழுவினர் மேற்கொள்ளவுள்ளனர்.

தெரிவு செய்யப்படும் 40 பெண்களுக்கு இந்தியாவில் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி வழங்கப்படவுள்ளதாக இலங்கை வந்துள்ள சேவா நிறுவனத்தின் சிரேஷ்ட இணைப்பாளர் உமாதேவி தெரிவித்துள்ளார்.

ஆடைத்தொழில், கணனி, கைப்பணி பொருட்கள், உணவு பதனிடலும் கால்நடை வளர்ப்பும் மற்றும் முயற்சியாண்மை, அபிவிருத்திபோன்ற ஏழு துறைகளில் இவர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

29 மாதங்களை கொண்ட இச்செயற்றிட்டத்தில் இந்தியாவில் பயிற்சி பெற்று வரும் 40 பெண்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரம் பெண்களுக்கு பயிற்சிகள் வழங்குவர் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

சேவா நிறுவனத்தின் சிரேஷ்ட இணைப்பாளர் தலைமையில் இலங்கை வந்துள்ள தூதுக்குழுவினர், சிறுவர் மற்றும் மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருடன் பேச்சு நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# நாடளாவிய ரீதியில் கண்நோய் பரவும் அபாயம் நிலவுகின்றது

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கண்நோய் பரவும் அபாயம் நிலவுவதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வைரஸ் காரணமாக கண்நோய் பரவுவதாகவும் நாளாந்தம் 100 இற்கும் மேற்பட்ட கண்நோயாளர்கள் சிகிச்சைக்காக கண் வைத்தியசாலைக்கு வருகை தருவதாக வைத்தியசாலை பணிப்பாளர் எஸ். ஏ. எச். லியனகே தெரிவித்தார்.

கண் சிவத்தல், கண்ணீர் கொட்டுதல், கண் வீக்கம், வெளிச்சத்தை பார்க்க முடியாமை என்பனவே இந்நோய்க்கான அறிகுறிகளாகும்.

கண் நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு கைக்குட்டை, துவாய், உடைகள் என்பவற்றை சுத்தமாக வைத்திருக்குமாறும் கைகளை சவர்க்காரத்தினால் கழுவ வேண்டும் எனவும் வலியுறுத்திய அவர் கண் நோயாளர்கள், பொதுமக்கள் நடமாடும் இடங்களைவிட்டு ஒதுங்கி இருக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

(ஸ்ரீ-2)

# அவதூறுச் செய்திகளை வெளியிட்டமைக்காக நஷ்ட ஈடு வழங்குமாறு நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

உலகின் முன்னணிச் செல்வந்தர்களில் ஒருவரான மலேசிய தமிழர் விஜய் ஈஸ்வரன் தொடர்பில் அவதூறான செய்திகளை பிரசுரித்தார் என்கிற வழக்கில் ஏசியன் த்ரிபியூன் ஆங்கில இணையத் தள பத்திரிகையின் ஆசிரியர் கே.ரி. இராஜலிங்கம் சுவீடனின் நெட்டாலி மாவட்ட நீதிமன்றத்தால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்படுத்தி அவதூறுச் செய்திகளை வெளியிட்டமைக்காக நீதிமன்றம் குறிப்பிடுகின்ற தொகையை ஈஸ்வரருக்கு இராஜலிங்கம் நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என்று விசேட நீதிபதிகள் குழு தீர்ப்பளித்துள்ளது.

ஏசியன் த்ரிபியூன் நிறுவனம் சுவிஸைத் தளமாக கொண்டு வெளிவருவதால் இவ்வழக்கு அங்கு தாக்கல் செய்யப்பட்டது.

(ஸ்ரீ-2)

# வடக்கின் நெல் உற்பத்தி 100 சதவீதத்தால் அதிகரிப்பு

## *மாகாண விவசாய செயலாளர் தெரிவிப்பு*

வடக்கின் நெல் உற்பத்தி 100 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மாகாண விவசாய செயலாளர் யூல் காலிதீன் தெரிவித்துள்ளார்.

பெரும்போகத்தின் போது வட பகுதியில் 2 இலட்சத்து 80 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டு இது ஒரு இலட்சத்து 24 ஆயிரம் மெற்றிக் தொன் ஆக காணப்பட்டது. அரசாங்கம் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தி நெல் உற்பத்தி ஏனைய பயிர்ச் செய்கைகளிற்காக வழங்கும் வசதிகள் இந்த வளர்ச்சிக்கான காரணங்களாகுமென காலிதீன் தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டம், பொருளாதார அமைச்சின் நிதியுதவி என்பன இதற்காக ஒத்துழைத்ததாகவும் அவர் கூறினார்.

வட பகுதி விவசாய நடவடிக்கைக்கு தேவையான விதை, நெல், உரம், டிரக்டர் என்பனவற்றை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு இலவசமாக வழங்கியுள்ளது.

நாட்டின் மொத்த நெல் உற்பத்திக்கு வட பகுதியிலிருந்து 15 சதவீத பங்களிப்பு கிடைத்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டதாகவும் வட பகுதியிலிருந்து கிடைத்த ஒத்துழைப்பினால் நெல்லிற்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை என்றும் வடமாகாண பிரதேச செயலாளர் கூறினார்.

வடமாகாண நீர்ப்பாசனத் துறையின் அபிவிருத்திக்கென அரசாங்கம் கடந்த மூன்று வருடங்களில் 859 கோடி ரூபாவை செலவிட்டதாக விவசாய அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் சி.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு உதவி அரசாங்கத்தின் நேரடியான நிதி என்பன இதற்காக பயன்படுத்தப்பட்டன.

அக்கராயன் குளம், இரணைமடு, யோதவாவி, வவுனிக்குளம் ஆகிய பிரதான குளங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

(ஸ்ரீ)

எங்கள் விரலறியும் போலித் தாள்கள் எவையென்று




தப்பியோட விட்டிடுவோமா !

இதை உங்களுக்குத் தெரிவிப்பது இலங்கை மத்திய வங்கி

(ஸ்ரீ-3663)

## மாணிக்கவாசகர் குருபூசை தினம்

(கரவெட்டி)

இந்து சமய கலாச்சார திணைக்களத்தின் ஆதரவில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி இந்து மன்றத்தால் மாணிக்கவாசகர் குருபூசை தின நிகழ்வு நாளை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன். கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதில் இந்து மன்றத்தின் சமய கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-24)

## 'எமன்' நாடக ஆற்றுகை

யுனிசெப் நிறுவனத்தின் ஆதரவுடன் சர்வோதயா நிறுவனத்தால் மிதிவெடி அபாயக் கல்வித் திட்டத்தின் கீழ் 'எமன்' நாடக ஆற்றுகை இன்று மாலை 5.30 மணிக்கு சில்லாலை வடக்கு சாந்தையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)

## ஏலவிற்பனை

(கரவெட்டி)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முடிவுற்ற வழக்குகளின் பொருட்களையும் மன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களும் நாளை மறுதினம் ஏல விற்பனைக்கு விடப்படவுள்ளதாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் திருமதி வாசுகி சுகிதரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-24)

# அரசாங்க கணக்காளர்களுக்கான வரிவிதிப்பு தொடர்பான கருத்தரங்கு

அரசாங்கக் கணக்காளர் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி செலுத்துநர் சேவைகள் பிரிவும் இத் திணைக்களத்தில் யாழ். பிராந்திய அலுவலகமும் இணைந்து நடத்தும் அரசாங்கக் கணக்காளர்களுக்கான வரிவிதிப்பு தொடர்பான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு அருகிலுள்ள பழைய மாவட்ட வைத்திய சாலை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் படி, இவ்வருடத்திலிருந்து தனியார்துறை ஊழியர்களைப் போன்று அரசாங்கத் துறை ஊழியர்களும் வரிவிதிப்பிற்கு உட்படுவதால் இது தொடர்பில் அரசாங்கத் துறைக் கணக்காளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், சந்தேகங்களைத் தீர்க்கும் முகமாகவே இக் கருத்தரங்கு நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக உழைக்கும் போதே செலுத்தும் வரி, நிறுத்தி வைத்தல் வரி மற்றும் பெறுமதிசேர் வரி போன்ற அரச நிர்வாகத்துடன் தொடர்புடைய வரிகள் இங்கு ஆராயப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள மத்திய மற்றும் மாகாண அரசாங்க கணக்காளர்கள் மற்றும் பல்கலைக்கழக நிதியாளர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளிப்பதே இக்கருத்தரங்கின் பிரதான நோக்கமாகும்.

ஆகையால் வடபிராந்தியத்திலுள்ள அரசாங்கக் கணக்காளர்கள் மற்றும் பல்கலைக்கழக நிதியாளர்கள் இக்கருத்தரங்கில் பங்குபற்றி உரிய விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு யாழ். பிராந்திய அலுவலகத்தின் 021 2222 076 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலக பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கரவை தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய கரவருட பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

இதில் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

(ஸ்ரீ-2)

# கற்கள் பரவப்பட்டு 6 மாத காலமாகியும் புனரமைக்கப்படாதுள்ள வீதி

## பயணிப்போர் பெரும் சிரமம்




கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள திருநகர் பிரதான வீதியானது கடந்த 6 மாத காலமாக புனரமைக்கப்படாது கற்கள் பரவிய நிலையில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பிரதான வீதியால் கனரக வாகனங்கள், பேருந்துகள், நோயாளர்காவுவண்டிகள், வர்த்தகர்களுக்கான பாரிய வாகனங்கள் என்பன அன்றாடம் பயணிக்கின்றன.

அத்துடன் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் எனப்பலரும் இவ்வீதியை தமது அன்றாடத் தேவைகளுக்காகப் பயன்படுத்துகின்றனர்.

அத்துடன் கற்கள் பரவப்பட்டு மேற்கொண்டு வீதி திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதுள்ளதால் இப்பாதையால் அன்றாடம் பயணிப்பவர்கள் பெரும் சிரமத்துடன் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சிலர் இடறி விழுந்து படுகாயங்களுக்கு உள்ளவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இப் பிரதான வீதியை செப்பனிட்டு மக்கள் அன்றாட போக்குவரத்திற்கு இலகுவான பாதையாக அமைத்துத் தருமாறு சம்பந் தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-2-8)

# 13 மாணவர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை

சம்மாந்துறை பிரதேச பாடசாலை ஒன்றில் கிணற்று நீரை அருந்திய நிலையில் திடீர் சுகவீனமுற்று 13 மாணவர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதாக சம்மாந்துறை வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

நேற்று முன்தினம் காலை ஒன்பது மணியளவில் திடீர் சுகவீனமுற்ற சுமார் 100 மாணவர்கள் வரையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் அவர்களில் சிலர் சிகிச்சைகளின் பின்னர் நேற்றுமுன் தினம் வீடு திரும்பியிருந்தனர்.

பாடசாலையின் கிணற்றிலிருந்து நீரை அருந்திய மாணவர்கள் வாந்தி மற்றும் வயிற்றுவலியால் அவதிப்பட்டதை அடுத்து வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

அதேவேளை கிணற்று நீரின் மாதிரி மற்றும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் சிறுநீர் மாதிரிகளையும் மருத்துவ ஆய்வுப் பிரிவிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# அனுருத்த ரத்வத்தைக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, தனது சொத்துக்களுக்கான வருமான மூலங்களை இலஞ்சவிசாரணை ஆணைக்குழுவுக்கு வெளிப்படுத்தத் தவறியமைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

33 மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கான வருமான மூலகங்களை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் வெளிப்படுத்த தவறியதாக அனுருத்த ரத்வத்தையின் மீது மேல் நீதிமன்றில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. அனுருத்த ரத்தவத்த சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி, ரியன்ஸி அரசகுலரட்ன ஆஜராகி எழுத்து மூலமும் வாய் மூலமும் வாதங்களை முன்வைத்தார். (ஸ்ரீ-2)

# புகையிரதத்தில் பயணச்சிட்டை இன்றி பயணிப்போருக்கான அபராதம் அதிகரிப்பு

புகையிரத்தில் பணச்சிட்டை இன்றிப் பயணிப்போருக்கான அபராதத் தொகை 50 வீதத்தால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக புகையிரதத்திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்மூலம் பயணச்சிட்டை இன்றிப் பயணிப்போரால் ஏற்படும் நட்டத்தை ஈடு செய்யக் கூடியதாக இருக்கும் என புகையிரத திணைக்களத்தின் வர்த்தக அதிகாரி சிசிர குமார தெரிவித்தார்.

முதல் தர இருக்கைக்கு ஆயிரத்து 100 ரூபாவாகவிருந்த அபராதம் ஆயிரத்து 650 ரூபாவாகவும் இரண்டாந்தர இருக்கைக்கு 800 ரூபாவாகவிருந்த அபராதம் ஆயிரத்து 200 ரூபாவாகவும் மூன்றாந்தர இருக்கைக்கு 600 ரூபாவாக விருந்த அபராதம் 900 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. பகல்-இரவு வேளைகளில் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் திணைக்கள அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

கள்ள நோட்டு எதுவெனக் கேட்டால்
எந்தக் குழந்தையும் சொல்லும்...




தளிர்களுக்கே தெரியும் போது
தருக்களுக்குத் தெரியாதா?

(சி-3662)

இதை உங்களுக்குத் தெரிவிப்பது இலங்கை மத்திய வங்கி

# விலங்கு விசர்நோய் தடுப்பூசியேற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக் குட்பட்ட யாழ். நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய இன்று காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை இராசாவின் தோட்டம் வீதி, அருள்மாதா கோவிலடியிலும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை கோவில் வீதி, இராசாவின் தோட்டம் ஒழுங்கையிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

அத்தோடு நாளை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முற்புறம், ஸ்ரான்லி வீதியி லும் காலை 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை அத்தியடி பிள்ளையார் கோவிலடியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்[illegible]க் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

# புலி ஆதரவாளர்கள் தொடர்ந்தும் இயங்குவதால் அவசரகாலச் சட்டத்தை இரத்து செய்ய முடியாது

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளிக்கும் தரப்பினர் தொடர்ந்தும் இயங்கி வருவதனால் அவசரகாலச் சட்டத்தை இரத்து செய்து முடியவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.**

போர் காரணமாகவே அவசரகாலச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் தற்போது நாட்டில் போர் நிறைவடைந்துள்ளதனால் சட்டத்தின் சில சரத்துக்களை நீக்கிவிட முடியும் எனவும் பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.


பயங்கரவாதத்தை மீண்டும் ஏற்படுத்த சிலர் முயற்சிப்பதாகவும் இதனால் முழுமையாக சட்டத்தை அகற்றுவதில் சிக்கல் நிலை காணப்படுவதாகவும் அவசரகாலச் சட்டத்தை எப்போது நீக்குவது என்ற தீர்மானத்தை ஜனாதிபதிமகிந்த ராஜபக்ஷவே எடுப்பார் என அவர் தெரிவித்துள்ளார். போர் வெற்றி குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் நடைபெற்ற மாநாடு தோல்வியடைந்தது எனக் கருதப்பட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்குலக நாடுகள் சில கலந்து கொள்ளாத போதிலும் பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரமுடைய ரஷ்யா உள்ளிட்ட பல முக்கிய நாடுகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு சக்திகளின் அச்சுறுத்தல்களுக்கு அரசாங்கம் ஒருபோதும் தலை வணங்கப் போவதில்லை என்றும் தொழிற் சங்க போராட்டங்களையும் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் கட்டுப்படுத்த அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# வீடற்ற மக்களுக்கு 6 அரச வங்கிகளூடாக வீடமைப்பு கடன்

## அமைச்சர் விமல் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் 6 மாத காலத்திற்குள் நாடு முழுவதும் 32 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அமைச் சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இதுவரை வருடாந்தம் 10 ஆயிரம் வீடு கள் மாத்திரமே அமைக்கப்பட்டன. ஆனால் 6 மாத காலப் பகுதிக்குள் 12 ஆயிரம் வீடு களை அமைக்க முடிந்துள்ளது. வீடுகள் இல்லாத மக்களுக்காக ஜனசெவன செயற் திட்டத்தின் கீழ் 6 அரச வங்கிகளூடாக கடனைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

10 சதவீத வட்டியின் கீழ் வழங்கப்படும் இந்தக் கடனை 10 வருடம் தொடக்கம் 12 வருடங்களுக்கு இடையில் திருப்பி செலுத்த முடியும். அத்துடன் கடன் வழங்கும் நிபந்தனைகளும் இலகுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த வீட்டுக் கடனை வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட வங்கிகள் 150 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளன என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வெலிக்கடை சிறையிலுள்ள கைதிகளின் எண்ணிக்கையை குறைக்க தீர்மானம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள கைதிகளின் எண்ணிக்கையை மூவாயிரமாக குறைப்பதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் தற்போது நான்காயிரத்து 600 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் வீ. ஆர்.டி. சில்வா குறிப்பிட்டார்.

அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய இங்குள்ள கைதிகளில் சிலரை மஹர சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஏனையவர்களை நாட்டிலுள்ள மற்றைய சிறைச்சாலைகளுக்கு எதிர்வரும் காலங்களில் மாற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படும் கைதிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் குற்றச்செயல்கள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்படும் கைதிகளை அவர்கள் பகல் வேளையில் சந்திப்பதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக பல்வேறு நிர்வாகப் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சிறைகளையும் வேறுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் தேவைக்கு புதிய பேருந்து வழங்கப்படும்



## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்திற்கான புதிய பேருந்து இவ் ஆண்டுக்குள் பெற்றுத் தரப்படும் என அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா உறுதிமொழி வழங்கியுள்ளார். இப்பாடசாலையில் அமைக்கப்பட்ட கேட்போர் கூடத்திறப்பு விழாவின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இப்பாடசாலையின் அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க அதிபர், ஆசிரியர், மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு 30 பேர் பயணிக்கக்கூடிய பேருந்து ஒன்று இவ்வாண்டுக்குள் பெற்றுத் தரப்படும்.

இச் செயற்பாடுகள் யாவும் மகிந்த சிந்தனையின் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைவாகவும் எனது கோரிக்கைக்கு அமைவாகவும் முன்னெடுக்கப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், பிரதி செயலாளர் வி.ரி.செல்வரட்ணம், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வராஜா, பாடசாலை அதிபர் உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-4)

# வடமாகாண தமிழ் இலக்கிய விழா இம்முறை மன்னாரில்

இந்த வருடம் வடமாகாண தமிழ் இலக்கிய விழாவை மன்னார் மாவட்டத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்த ஏற்பாடுகள் குறித்து ஆராயும் உயர்மட்ட கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என். தேவநாயகன் தலைமையில் மாவட்ட அரசாங்க அதிபர் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர், மாவட்ட உதவி செயலாளர், வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர், மன்னார் கல்விப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் வடமாகாண இலக்கிய விழாவை மன்னாரில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆய்வு அரங்கை மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியிலும் கலை நிகழ்வுகளை நகரசபை மண்டபத்திலும் நடத்துவதற்கான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமாகாண தமிழ் இலக்கிய விழாவின் ஒருங்கிணைப்பு தலைவராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2)







கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கான புதிய கட்டடத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பால்நிலை சமத்துவ நிபுணர் திருமதி கல்யாணி, கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசா ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் ஆளுநர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் இணைந்து வகுப்பறைக் கட்டடத்திற்கான நாடாவை வெட்டித்திறந்து வைப்பதனையும் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும் படங்களில் காணலாம்.

# கலாநிதி சோ.கிருஷ்ணராஜா நினைவுப் பேருரை-2011

## 10 பல்வகைகள் ஒன்று சேர்தல்

## [Assemblage of Multiplicity]

தேசிய போராட்டங்களை ஆதரித்த மாக்ஸிஸ நெறியின்பால் கவரப்பட்ட இவர் தமிழ்த் தேசியப் போராட்டத்தினை அடக்கப்பட்ட மக்களின் போராட்டமாக் கணித்து தமிழ்த் தேசியத்தை வரவேற்றவர். அவரது பிற்கால எழுத்துக்கள் இதற்கான சான்றுகளாகும்.



**கலாநிதி மௌனகுரு**
**யாழ் பல்கலைக்கழகம்**

இவரது ஆய்வுகள்: நாடகம், நுண்கலை, இலக்கியம், பண்பாடு, அரசியல், வரலாறு எனப் பலதரப் பட்டவை. கீழ்வரும் பன்மைகளின் சேர்க்கையில் இவர் சிந்தனைகள் உருவாக்கம் பெற்றன.

1.இவரது பிறந்தகம் சமூகச்சூழல்

2.பேராதனை பேர்மிங்ஹாம் கல்வி

3.கம்யூனிச சித்தாந்தம் அதன் பின்னர் எழுந்த பிராங்பெட் சிந்தனை மரபு

4.அல்துாஸர் அன்டோனியோ குறோம்சி ஆகியோரின் செல்வாக்கு

5.பார்த்த தொழில்கள் (சமகால மொழி பெயர்ப்பாளர், ஆசிரியர், விரிவுரையாளர், நுண்கலைத் துறைத் தலைவர்)

6.முற்போக்கு எழுத்தாளர் தொடர்பு

7.வித்தியானந்தன், கணபதிப் பிள்ளை தொடர்பு

8.தமிழ்த் தேசியப் போராட்டம்

ஓவியர் மாற்கு (1933-2000)

பாடசாலை ஓவியம், வர்த்தக ரீதியான ஓவியம், மதத்தை ஒட்டி வளர்ந்த மரபு ரீதியான ஓவியம் என்ற யாழ்ப்பாண ஓவிய மரபுகளிலிருந்து மாறுபட்டு 1980 களுக்குப் பிறகு நவீன ஓவியங்களை ஈழத்தமிழருக்கு அறிமுகம் செய்தவராக மார்க் காணப்படுகிறார். ஈழத்தின் தமிழர் மத்தியில் நவீன ஓவியப் பாணியின் முன்னோடி எனக் கருதப்படுகிறார். அவரது காலப்பகுதியில் பல மூத்த ஓவியர்கள் நவீன ஓவியங்களைப் பரீட்சித்துப் பார்த்தார்களாயினும், பிரஞ்ஞை பூர்வமாக இதில் ஈடுபட்டதுடன் அவ் ஓவிய மரபை உருவாக்கப் புதிய சாதனங்களையும் உபயோகித்தவர் மார்க் ஆவார்.

மார்க்கிற்கும் எழுத்தாளரான அ.யேசுராசாவிற்குமான தொடர்பு முக்கியமானதாகும். யேசுராசா வெளியிட்ட "தேடலும் படைப்புலகமும்" என்ற மார்க் பற்றிய நூல், மார்க் பற்றி மாத்திரமன்றி ஈழத் தமிழர் மத்தியில் நவீன ஓவியம் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்திய நூலுமாகும்.

மார்க்கின் ஓவிய வாழ்க்கைக் காலத்தை நான்கு கட்டங்களாகப் பிரித்துப் பார்க்கலாம்.

1.மங்கல் நிறக்காலம்(Dull period)

### 19 ஆம் நூற்றாண்டின் பின் ஈழத்தமிழர் மத்தியில் உருவான கலை - இலக்கியப் போக்குகளை தெரிந் தெடுக்கப்பட்ட சிலருக்கூடாகப் புரிந்து கொள்ளல்

2.வெள்ளைக்காலம்

3.நீலக்காலம்

4.கோடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்

இந்தப் படிநிலையூடே அவர் பாணி மாறி மாறி வளர்ந்துள்ளது. பிக்காசோ, ஜெமினிரோய், அமிர்தா சேர்க்கில் ஆகியோரின் தாக்கம் மார்க்கில் உண்டு. மார்க்கின் ஓவியங்கள் பல்வகைப் பாணிகளில் அமைந்தவை. மார்க்கினுடைய உருவங்கள் வாழ்வின் கஷ்டங்களைத் தாங்கி அந்தத் தொழிலை எப்போதும் செய்து வந்த ஜீவன்கள். இதனால் அவற்றினுடைய குறிப்பிட்ட உறுப்புக்கள் அபரிதமாக நீட்டப்பட்டிருக்கின்றன. மார்க் தேடல் நோக்கம் மிகுந்த ஒரு படைப்பாளி. எனவே தான் அவர் கழுவுதற்பாணியிலிருந்து விடுபட்டு கியூபிசம் நாட்டாரியற்றன்மை போன்ற தன்மைகளுடா



சோ. கிருஷ்ணராஜா

கப் பயணித்து, கடைசிக்காலத்திற் 'சோக்' கலரும் பென்சிலும் காட்போட்டும் கொண்டு செயற்பட்டிருக்கின்றார். தன்மீது செல்வாக்குச் செலுத்திய சகல பாணிகளுக்கூடாகவும் தன் அனுபவங்களை ஓவியமாக்கியுள்ளார்.

இவ்வாறு அவர் ஓயாமல் ஓவியத்துக்குள் வாழ்ந்து கொண்டிருந்த ஓவியராகக் காட்சி தருகின்றார். ஆடும் சிவன், சகுந்தலை போன்ற புராணக் கதைகளையும் நவீன பாணியில் தீட்டியவர் மார்க். அவரது அலங்காரம், பதுமை, மீட்டல், அவதி ஜூலை 83 போன்ற ஓவியங்கள் ஈழத்தமிழரின் சமகால அனுபவங்களை கூறுபவை. (தொடரும்)

# விவசாய உற்பத்திப்பொருட்களின் அறுவடைக்குப்பின்னான இழப்புக்களும் அவற்றை முகாமைத்துவப்படுத்தலும்

தற்காலத்தில் வளர்ந்து வரும் சனத்தொகைக்கேற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டிய கட்டாய தேவை உள்ளது. அந்த வகையில் பல்வேறு நவீன தொழில் நுட்பங்கள் விவசாயத்துறையில் உட்புகுத்தப்பட்டு விளைச்சல் அதிகரிக்கப் படுகின்றது. இவ்வாறு உட்புகுத்தப்படும் புதிய தொழில்நுட்பங்களில் பல சூழல் சமநிலையை குழப்புவதற்கு ஏதுவாக அமைகின்றன. ஆனால் தனது வாழ்வாதார மாக விவசாயத்தையே நம்பியிருக்கும். விவசாயிகளுக்கு விளை நிலத்தில் இருந்து அதிக இலாபத்தை பெறுவதே ஒரே நோக்கமாக இருக்கும். ஆகவே விவசாய பொருட்களின் இழப்புக்கள் இயலுமான வரை குறைதல் சாலச் சிறந்தாகும்.

இந்த வகையில் அறுவடைக்கு பிந்திய தொழில் நுட்பம்(Post harvest technology)பற்றிய அறிவு ஒரு விவசாயிக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அறுவடைக்கு பின்னான இழப்புக்கள், ஒரு பயிரானது அறுவடைக்கு உட்பட்ட கணத்திலுருந்து, அந்த விளைபொருள் சந்தையில் நுகர்வோன் கைகளை அடையும் வரை ஏற்படும் சகல இழப்புக்களையும் உள்ளடக்கும். ஆகவே அறுவடைக்கு பின்னான இழப்புக்களை கட்டுப்படுத்துவதற்குரிய சகல பொறிமுறைகளும் ஒரு பயிரில் அறுவடையை மேற்கொண்ட உடனேயே ஆரம்பிக்கப்படவேண்டும்.

பொருட்களின் சந்தைப் பெறுமதியை அதிகரிக்கும் பரிகரண பொறி முறைகளை விவசாயிகள் அதிகம் அறிந்திருப்பதில்லை. அறுவடைகுகுப் பின்னான இழப்புக்கள் பொதுவாக 35-40% காணப்படுகின்றது. சூழல் வெப்பநிலை அதிகமாக உள்ள காலத்தில் உயிர்க் கலங்களில் இருந்து நீர் இழப்புவீதம் மிக அதிகமாக இருக்கும். இந்த நீரிழப்பானது நிறையில் குறைவை ஏற்படுத்துகின்றது. உதாரணமாக வெங்காயத்தின் அறுவடையை எடுத்துக் கொண்டால் வெங்காயமானது அறுவடையின் பின் சிலதினங்களுக்கு அறுவடை செய்த நிலத்திலேயே அதனுடைய தாள்களை சூரிய வெப்பத்தின் மூலம் உலர்த்துவதற்காக காயவிடப்படுகின்றது. ஆனால், இவ்வாறு விடப்படும் போது வெங்காயக் குமிழ்களில் இருந்து 3-6% ஆன நீரிழப்பு ஏற்படுகின்றது. ஆகவே இதனை எமது விவசாயிகள் இயன்ற அளவு கட்டுப்படுத்த முடியும். எவ்வாறெனில், விளை நிலத்தில் நாம் நிரைநிரையாக குமிழ்களை அறுவடை செய்யும்போது ஒரு நிரையில் முன்னுள்ள சிறிய வெங்காயப் பிடியில் உள்ள குமிழ்களை பின்னுள்ள சிறிய பிடியின் தாள்கள் மூலம் மூடமுடியும் இவ்வாறு தரை முழுவதும் அறுவடை செய்யும் போது குமிழ்களிலிருந்து நீரிழப்புத்தடுக்கப்படும்; அதேவேளை தாள்கள் சூரிய வெப்பத்தால் இலகுவில உலர்த்தப்படும்.

அடுத்ததாக பழங்களை அறுவடை செய்யும்பொழுதும் சூரியவெப்பம் குறைந்த நேரத்தை தெரிவுசெய்தல் வேண்டும். மேலும் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு அவற்றைக் கொள்கலன்களில் இடம் மாற்றும்போது குறைந்த பழ அடர்த்தியை பேணுதல் வேண்டும். (Least fruit density) தற்காலத்தில் , அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பழங்களைக் கடத்தும் கொள்கலன்களில் நீர் நிரப்பப்பட்டு, பழங்கள் ஒன்றுடன் ஒன்று உரசுவதால் ஏற்படும் இழப்பும் பழங்களுக்கு ஏற்படும அதிர்வுத்தாக்கமும் குறைக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட வகைப்பொருட் களின் உற்பத்தி குறிப்பிட்ட காலப்பகுதியில் அதிகமாக இருக்கும்போது விவசாயிகள் அப்பொருட்களுக்குரிய சந்தைப் பெறுமதியை உரிய வகையில் பெற்றுக் கொள்ள முடிவதில்லை. ஆகவே இவற்றை பரிகரணப்படுத்தி பிறிதொரு நேரத்தில் உரிய முறையில் அடைக்கப்ப்ட்ட வற்றலாக விற்பதன் மூலம் உரிய விலையை பெற்றுக் கொள்ள முடியும்.

எனவே பல்வேறுபட்ட வகையான உலர்த்திகள் பொருட்களை உலர்த்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு பல்வேறுபட்ட மரக்கறிவகைகள் வத்தல்களாக பரிகரணம் செய்யப்பட முடியும். உலர்த்திகளில் வெப்பக் காற்றானது (Hotair) பயன்படுத்தப்படுகிறது. விவசாயப் பொறியியல் துறையானது இவ்வாறு உலர்த்திகளின் வினைத்திறன் பற்றிய ஆய்வைத் தற்பொழுதுமேற்கொண்டு வருகிறது. ஆய்வில் உள்ள எமது உலர்த்தியானது வெப்பச் சுருளின் மூலம் உருவாகும் வெப்பததை, காற்றை பீச்சியடிப்பதன்மூலம் வெப்பக் காற்றை உருவாக்கி அதன்மூலம் உலர்த்துதல் நடைபெறுகின்றது.

குளிர்முறைச் சேமிப்பானது(Cold Storage) விவசாய அறுவடைப் பொருட்களிலிருந்து நீரிழப்பைத்தடுப்பதற்கு பயன்படும் பிறிதொரு முறையாகும். விவசாயிகள் மிகவும் குறைந்த செலவுடன் களிமண்ணாலும், செங்கற்களாலும் உருவாக்கப்பட்ட ஒரு அறையைத் தயார் செய்து அங்கு பொருட்களை தற்காலிகமாக சேமித்து நீர்இழப்பைத் தடுக்கவும் முடியும்.

இவ்வாறு ஒரு குளிரறையை தயாரிக்கும் பொழுது இருபடை தடிப்பாலான சுவர் தயாரிக்கப்பட வேண்டும். இவ்விருபடைகளுக்கு இடையேயான இடைவெளி கரித்தூளினால் நிரப்பப்பட்டு, இவ்வமைப்பானது

**பொன்னையா ஆழ்வாப்பிள்ளை**
**தலைவர்,விவசாய இலத்திரனியல்துறை,**
**விவசாயபீடம்,யாழ்.பல்கலைக்கழகம்**

நீரைப் பீச்சுவதன் மூலம் எப்பொழுதும் ஈரலிப்பாகப்பேணப்பட வேண்டும்.

எனவே எமது மண்ணில் உள்ள விவசாயிகள் அறுவடைக்குப் பின்னான இழப்புக்கள் பற்றிய அறிவைப் பெற்றுக்கொண்டு அவற்றைத் தடுப்பதற்கு பல்வேறுபட்ட இரசாயணங்களை பாவிப்பதைத் தவிர்த்து இயற்கையுடன் ஒத்து இசையக்கூடிய மேற் கூறப்பட்ட எளிய தொழில் நுட்பங்களை பாவித்து எம்மையும் எமது சூழலையும் பாதுகாக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது. இதன்மூலம் நாம் விவசாய இரசாயனங்களால் ஏற்படும் பலகொடிய நோய்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

# தடைகளையும் சோதனைகளையும் துவம்சம் செய்யும் துணிவு படைத்த 8 ஆம் எண்ணில் பிறந்தவர்களே!

மனிதர்கள் எப்போதும் இன்பத்தையே தேடி ஓடுகிறார்கள். "சுவையாக இருக்கிறது" என்று அதிகமாக இனிப்புகள் சாப்பிட்டுவிட்டு, அதன் பின்பு செரிமானம் ஆகாமல், வயிறு சரியில்லை, நீரிழிவு நோய் உடம்பில் ஏறிவிட்டது என்று தவிப்பவர்கள்தான் இன்றைய உலகில் அதிகம்! அரிய நெல்லிக்கனியானது சாப்பிடும்போது கசக்கும். ஆனால் சாப்பிட்ட பின்பு மிகவும் இனிக்கும். மேலும் உடலின் ஆரோக்கியத்திற்கும் இந்தக் கனி மிகவும் சிறந்தது! இருப்பினும் நெல்லிக்கனியைச் சாப்பிடும் போது கசப்பு என்ற காரணத்திற்காக பெரும்பாலானோர் சாப்பிடுவதில்லை.

அது மட்டுமன்று மனிதன் மற்ற எல்லாவற்றையும்விடத் தன் நாக்கிற்கே அடிமையாக இருக்கிறான்! நினைத்துப் பாருங்கள்! தொண்டைக்குக் கீழ் எந்த உணவுப் பொருட்கள், பானங்கள் சென்றாலும் ஒன்று தான். நாக்கிற்கு கீழே சென்றுவிட்டால், எந்தப் பொருளுக்கும் எந்தச் சுவையும் இல்லை! இருப்பினும் மக்கள் தங்களின் உடல்நலம் பாராது நாக்கின் சுவைக்காகவே ருசியாகச் செய்து சாப்பிடுகிறார்கள். மக்களின் இரசனைதான் என்னே? அதைப் போன்றே மற்ற எட்டு எண்களும் மனிதனை தூண்டிவிட்டு அவனை இகலோக... வாழ்க்கையில் சுகங்களில் ஆழ்த்தி விடுகிறது! மனிதனும் தனக்கு யோகம் வந்துவிட்டது என்று மகிழ்கிறான்! ஆனால் சனிபகவான் ஒருவர்தான் மற்ற கிரகங்களின் தன்மையைக் கவர்ந்து ஒருவன் மற்ற ஜென்மம் வரை தொடர்ந்து செய்த வினைகளை ஆராய்ந்து, அவனது செயல்களுக்கு ஏற்ப முதலில் தீய பலன்களையும், பின்பு நல்ல பலன்களையும் தவறாமல் கொடுத்துவிடுகிறார்! மற்ற நவக்கிரகங்களைப் போல், சனீஸ்வரரை ப்ரீதி செய்து, எளிதில் இவரது தண்டனையிலிருந்து தப்ப முடியாது! 8ஆம் எண்ணில் பிறக்கும்போதே, மனிதன் விதியில் வசப்படுகிறான், 8ஆம் எண் பிறவி எண்ணாக வரும் போது வாழ்க்கையில் கடும் போராட்டத்தையும், உடலில் அல்லது மனத்தில் ஏதாவது சிறிய நோயையும் கொடுத்து விடுகிறது. ஆனால் விதி எண்ணாக வரும்போது, அவனது முயற்சிகளையும், ஊக்கத்தையும் தனது காலத்தில் (30 வயதுக்கு மேல்) கொடுத்து அவனைத் தடுமாற வைத்து விடுகிறது! அவனது சொந்தங்கள், உறவுகள், நண்பர்கள் அனைவரிடமும் கெட்ட பெயர் அல்லது அவமானம் அடைய நேரிடுகிறது! பின்பு அவனை தன் வழியே போராடும் குணத்தை 8 எண் வாரி வழங்குகிறது! புதிய சூழ்நிலை, புதிய மனிதர்கள், புதிய ஊர் என்று ஒரு புதிய அற்புத வழியைத் திறந்து விடுகிறது! எனவே மக்களும், தங்களது கடுமையான உழைப்பால் வாழ்க்கையின் உச்சியை 45 வயதுக்கு மேல் எப்படியும் அடைந்து விடுகிறார்கள். இதுவே அனுபவ உண்மை ஆகும். பாடசாலையில் தனது போதனையாலும் தேவைப்பட்டால் தண்டனையாலும் ஒரு மாணவனைச் சீர்திருத்தும் ஆசிரியர் போன்றவரே சனீஸ்வராவார். எனவே 8ஆம் எண் விரும்பத்தக்கதேயன்றி வெறுக்கத்தக்கதன்று!

சில அன்பர்கள் கோடீஸ்வரர்கள் குடும்பத்தில் பிறந்திருப்பார்கள். இவர்கள் என்னதான் வசதி மிகுந்த நிலையில் வாழ்ந்திடினும், வண்டுகள் துளைத்த மாங்கனியைப் போல் உள்ளக் குடைச்சல்கள் நிறைந்தவர்கள்! மனதில் ஏதாவது ஒரு சோகத்தையும், வியாதியையும் வைத்துக் கொண்டு, மனதில் நிம்மதியில்லையே என்று அலைவார்கள். "பாசமாவது ஒன்றாவது. அது விதியில்தான் கிடக்கிறது" என்று புலம்புவார்கள்.

ஏதாவது ஒரு பெரிய குறை அல்லது குறைபாடு மனதை அரித்துக் கொண்டே இருக்கும். குழந்தையில்லை, மனைவியால் இன்பமில்லை. நண்பனால் சுகமில்லை என்று எதையாவது நினைத்துத் தங்களை வருத்திக் கொள்வார்கள்.

வாழ்க்கையினை வெறுத்து முதியோர் இல்லம், ஆன்மீக மடங்கள், அநாதை இல்லங்கள் ஆகியவற்றில் இருப்பவரும், அதனை ஆரம்பிப்பவரும் 8ஆம் எண்காரர்களேயாகும்.

"எட்டாவது பெண் பிறந்தால் எட்டிப் பார்த்த இடமெல்லாம் குட்டிச் சுவர்" என்பது பழமொழி. மக்களும் 8, 17, 26 ஆகிய திகதிகளைக் கண்டு தான் பயப்படுகிறார்கள். எந்த ஒரு நற்காரியத்தையும் தவிர்த்து விடுகிறார்கள்.

## போராடும் குணம் கொண்டவர்கள்

8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களும், 8ஆம் எண்ணை விதி எண்ணாக உடையவர்களும் 9ஆம் எண்ணில் தங்களது பெயரை உடையவர்களும், தங்களது வாழ்வில் பல தோல்விகளையும், வேதனைகளையும், சில அவமானங்களையும் சந்தித்தே ஆகவேண்டும் என்பதே 8ஆம் எண் கூறும் வாழ்க்கை நியதி! 8ஆம் எண்ணில் பிறந்த அதிர்ஷ்டசாலிகள் (சனி வலிமை நல்ல நிலையிலிருந்தாலும்) பெருத்த தனவான்களாகவும், பல்வேறு தொழில்களை உடையவர்களாகவும், நல்லவர்களாகவும் இருப்பார்கள்! தியாகிகளாகவும், அருளாளர்களாகவும், சிறந்த நீதிபதிகளாகவும், பேராசிரியர்களாகவும், அமைச்சர்களாகவும், உயர் அதிகாரிகளாகவும், கோடீஸ்வரார்களாகவும் இருப்பார்கள். ஆனால் 8ஆம் எண்ணில் பிறந்த மற்றவர்கள் தங்களது பிரச்சினைகளிலிருந்து விடுபட முடியாமல் வாழ்க்கை முழுதும் தவிக்கின்றவர்களே. பெரும்பாலும் கொலை, களவு, கொள்ளை, கடத்தல், பொய்க் கையெழுத்து, குடி, சூது, வரசம், நம்பிக்கைத் துரோகம் போன்ற பல்வகை சூழ்நிலைகளில் மாட்டிக் கொண்டு தவிக்கின்றார்கள். ஆனால் மேற்கூறிய துர்ப்பலன்களைக் கண்டு வாசகர்கள் பயப்படவேண்டாம்! 8ஆம் எண்காரர்களும் அதிர்ஷ்டம் மிகுந்த வாழ்க்கை வாழ வேண்டுமெனில் தங்களது பெயரினை மிகவும் ஆராய்ந்து, நல்ல பெயர் ஒலியிலும், பெயர் எண்ணிலும் வைத்துக் கொண்டால், தங்களது கெட்ட விதியினைக்கூட மாற்றிவிட முடியும்! பல அன்பர்கள் பெயரை சீர்படுத்தி பலனடைந்துள்ளார்கள். எனவே கவலைப்பட வேண்டாம்.

அதுமட்டுமன்று பிரபல சினிமா நட்சத்திரங்களும், பெருத்த வியாபாரிகளும், மிராசுதார்களும், அதிகாரிகளும், கோடீஸ்வரர்களும் 8ஆம் எண்ணில்தான் பிறந் துள்ளனர். சீக்கிய மதத்தைத் தோற்றுவித்த குருநானக், ஈ.வெ.ரா பெரியார், ஜோர்ஜ் பெர்னாட்ஷா, ஜே.ஆர்.டி. டாட்டா போன்றோரெல்லாம் இந்த எண்ணில் பிறந்து, வெற்றிகரமாக வாழ்ந்தவர்கள்தான்.

தெய்வ நம்பிக்கை இவர்களிடம் தீவிரமாகவே உண்டு. ஒன்று கடவுளே இல்லை! என்று வாதிடுவார்கள். அல்லது கடவுளே கதி என்று இறைவனை நம்புவார்கள்.

தாங்கள் நல்லதென்று நினைத்து எடுத்துச் செய்கின்ற காரியங்களை எவ்வளவு எதிர்ப்புகளும் தடைகளும் வந்தாலும் அவைகளை பற்றிக் கவலைப்படாமல் செய்து முடிக்கும் வலிமை இவர்களுக்கு உண்டு. ஓரளவு பிடிவாத குணம் நிறைந்தவர்கள். இவர்கள் மேற்பார்வைக்குக் கடின மனமும் பிடிவாதமும் உடையவராகத் தோன்றினாலும் சமூகத்தில் பாதிக்கப்பட்டோரைக் கண்டால் அவர்களை ஆதரித்து வாழ்க்கையளிக்கத் தயங்க மாட்டார்கள். பலாப்பழம் போன்ற குணமுடையவர்கள்.

பொது சேவைக்கான முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பீர்கள். தங்களது வாழ்க்கையிலும் எப்போதும் உழைத்துக் கொண்டே தான் இருப்பார்கள். தங்களின் வசதிகளையும் பதவிகளையும் உறவினர்களையும் திடீரெனஒரு நாள் ஒதுக்கிவிட்டு மக்கள் சேவைக்கென ஓடிச் செல்பவர்கள் இவர்கள் தான். தனிமனித வாழ்க்கையானாலும் சமுதாய வாழ்க்கையானாலும் 8 ஆம் எண்ணின் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டு விட்டால் பெரிய சோதனைகளை நிச்சயம் சந்திக்க நேரிடும் என்றே எண் கணிதம் சொல்கிறது.

சாதகத்திலும் எந்த ஒரு கிரகமும் 8 ஆம் இடத்தில் (இராசிச் சக்கரம்) இருந்தாலும் (சனியைத் தவிர) அல்லது கோசாரத்தில் 8 ஆம் இடத்திற்கு வந்தாலும் அந்தச் சாதகர்கள், அந்தக் கிரகத்தின் காரணத்தால் பல துன்பங்களை நிச்சயம் அடைவார்கள் என்று சோதிட சாத்திரம் கூறுகிறது.

8 ஆம் எண்காரர்கள் பெரும் தத்துவ ஞானிகளாவும் மனிதர்களுக்கு வாழ்க்கையில் வழிகாட்டியாகவும் விளங்குகிறார்கள்.

### இவர்களது தொழில்

இவர்களுக்கு இரும்பு சம்பந்தமான அனைத்து தொழில்களும் வெற்றி தரும். 8 ஆம் எண் வலிமை பெற்றால் பொறியலாளர்களாகவும் வலிமை குறைந்தால் சாதாரணத் தொழிலாளர்களாகவும் இருப்பார்கள்.

லொறி, பஸ் போன்ற (சனியின் காரகத்துவ) தொழில் இவர்களுக்குப் பெருத்த அதிர்ஷ்டத்தை தரும். மில்கள்,எண்ணெய் மில்கள், இரும்பு வியாபாரம் ஆகியவையும் நன்மை தரும். எண்ணெய் வியாபாரமும் நல்லது. ஆன்மீக மடாதிபதிகள், கோவில் தர்மகத்தா, ஊர்மணியகாரர் போன்றவர்களாகவும் புகழ் பெறுவார்கள்.

மேலும் நிலம் சம்பந்தப்பட்ட அனைத்துத் தொழில்களும் இவர்களுக்கு யோகத்தைத் தரும். விவசாயம், கட்டடங்கள் கட்டுதல் இவர்களுக்கு ஒத்து வரும். பெரிய நிலக்கிழார்களும் பெரும் விவசாயிகளும் இவர்கள்தான்.

உலகத்தை மறந்து உழைப்பதால் இவர்கள் ஆராய்ச்சித் தொழில்களில் பலவெற்றிகள் பெறுவார்கள். பூகோளம் மற்றும் நில ஆராய்ச்சிகளில் இவர்களது வாழ்க்கை அமையும். 8 ஆம் எண்காரர்கள் மிகப் பெரிய பேச்சாளர்களாகவும் மதப் பிரசங்கிகளாகவும் விளங்குவார்கள். சுரங்கப் பொருட்கள் எடுத்தல், சுரங்கப் பொருட்கள் வியாபாரம் செய்தல் வெற்றி தரும். கிரனைட் கற்கள் கடப் பாறகற்கள் வியாபாரம் போன்றவை வெற்றி தரும்.


கம்பளித் துணிகள், ஆயுதங்கள், சோப்புக்கள் வியாபாரம் மற்றும் உற்பத்தித் தொழில்கள் நல்ல இலாபத்தை தரும். இவர்கள் அச்சகம், சோதிடம், வைத்தியம் ஆகிய தொழில்களிலும் வெற்றியடையலாம். சிறைத் துறையும் இவர்களுக்கு ஒத்துவரும்.

### திருமண வாழ்க்கை

இவர்களது திருமண வாழ்வு பெருமையாக சொல்லப்படவில்லை. திருமண வாழ்க்கையில் ஏதாவது ஒரு குறைபாடு இருக்கும். தங்களது மனைவியுடன் கூட திறந்த மனதுடன் பழக மாட்டார்கள். சிலர் தனது மனைவிகளை அலட்சியத்துடன் நடத்துவார்கள். மனைவி எது சொன்னாலும் அதை மறுத்துப் பேசுவார்கள்.

இதேபோல் 8 ஆம் திகதி பிறந்த மங்கையரும் தங்கள் கணவருடன் அன்பின்றியே நடந்து கொள்வார்கள். தன் மனம் போல் வாழ நினைப்பார்கள். இங்கனம் உண்மையான அன்பின்றியே பெரும்பாலான 8 ஆம் எண் நபர்கள் வாழ்கின்றார்கள்.

இவர்கள்1,4 ஆகிய திகதிகளில் பிறந்த பெண்களை மணந்து கொள்ளலாம். 8 ஆம் எண் வரும் பெண்களை மட்டும் திருமணம் செய்யக் கூடாது. 2,7 வரும் பெண்களைத் தவித்துவிட வேண்டும். 9 ஆம் எண் பெண்கள் இவர்களை அடக்கி ஆள நினைப்பார்கள். திருமணம் செய்யும் நாளின் கூட்டுஎண் 1,6 வந்தால் மிகவும் நல்லது. (தொடரும்)


வட மாகாண ரீதியாக நடத்தப்பட்ட இசை நாடகப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கிளிநொச்சி மகா வித்தியாலய அணிக்கு வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வெற்றிக்கிண்ணம் வழங்குவதனையும் பேச்சுப் போட்டியில் 4 ஆம் பிரிவில் இரண்டாம் இடத்தைப்பெற்ற மாணவிக்கு சான்றிதழ் வழங்குவதனையும் வாசிப்புப் போட்டியில் 2 ஆம் பிரிவில் 3 ஆம் இடத்தைப்பெற்ற மாணவியை வாழ்த்துவதனையும் படங்களில் காணலாம்.

# எலியந்தவைற் தண்டிக்கப்பட வேண்டும்; இலங்கை மருத்துவர் பேரவை கோரிக்கை

ஜனாதிபதியின் தனிப்பட்ட மருத்துவ ஆலோசகரும் பிரபல ஆயுர்வேத மருத்துவருமான எலியந்த வைற் தண்டிக்கப்பட வேண்டுமென இலங்கை மருத்துவர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

குறித்த நபர் சட்டவிரோதமான முறையில் தமது பெயருக்கு முன்னால் டாக்டர் என்னும் பதத்தைப் பயன்படுத்தி வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எலியந்த வைற் இலங்கை மருத்துவர் பேரவையிலோ அல்லது ஆயுர்வேத மருத்துவர் பேரவையிலோ அங்கம் வகிக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சட்டவிரோதமான முறையில் எலியந்த வைற் நோயாளிகளுக்கு மருந்துப் பொருட்களைப் பரிந்துரை செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எலியந்த வைற்றின் தகுதிகள் குறித்து எவ்வித தரவுகளும் கிடையாது என மருத்துவர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. முன்னணி கிரிக்கெட் வீரர் உபுல் தரங்கவிற்கு எலியந்த வைற் பரிந்துரை செய்த மருந்துப் பொருள் காரணமாக தற்போது தரங்கவிற்கு போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கை மருத்துவர் பேரவையில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் மட்டுமே மருந்துப் பொருட்களை பரிந்துரை செய்வதற்கு தகுதியுடையவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு சட்டவிரோதமான முறையில் மருந்துப் பொருட்களை பரிந்துரை செய்யும் நபர்களுக்கு எதிராக அபராதம் மற்றும் சிறைத் தண்டனைகளை விதிக்க முடியும் என இலங்கை மருத்துவர் பேரவை சுட்டிக்காட்டிள்ளது. (ஸ்ரீ-2)

# நவோதயா வார இறுதிநாள் நிகழ்வு

(புன்னாலைக்கட்டுவன்)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் நவோதயா வார இறுதி நாள் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு அதிபர் க.கனகராஜா தலைமையில் ஆர்.சி. நடராஜா கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.இரோசேந்திரன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் மாணவர்களது கல்விக் கண்காட்சியும் இடம்பெறும். (ஸ்ரீ-78)

# விவசாய ஆராய்ச்சி அதிகாரிகளுக்கு மாதாந்த பிரயாணக் கொடுப்பனவு

## அமைச்சரவை அங்கீகாரம்

உதவி விவசாய ஆராய்ச்சி அதிகாரிகளுக்கு மாதாந்த பிரயாணக் கொடுப்பனவும் காரியாலய உபகரணத் தொகுதியும் வழங்குவதற்கு கமநல சேவைகள் மற்றும் வனவள அமைச்சு தீர்மானித்துள்ளது.

நீதிமன்றம், அமைச்சு அல்லது திணைக்களத்துக்கு கடமையின் நிமித்தம் செல்லும் சந்தர்ப்பங்களின் போதே மாதாந்த பிரயாணக் கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் கமநல சேவை நிலையத்துக்கும் தமது கடமைப் பிரிவிற்குள்ளும் செல்வதற்கு இக்கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது எனவும் கமநல சேவைகள் மற்றும் வனவள அமைச்சர் எஸ்.ஏ.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

உரிய அதிகாரிகளினால் நீண்ட காலமாக இக் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்ததாகவும் இதனைக் கருத்திற் கொண்டே இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் காரியாலய உபகரணத் தொகுதிகள் மூன்று கட்டங்களாக வழங்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# இழுவைப் படகுகளில் மீன்பிடிக்க அனுமதியளிப்பு

யாழ். கடற்பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு இழுவைப் படகுகள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத்தின் தலைவர் எஸ். தவரெட்ணம் தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி முதல் ஆழ்கடல் பகுதியில் இழுவைப் படகுகளில் தொழில் செய்வது தடைசெய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் மீனவ சமுதாயத்தின் வறுமை நிலை மற்றும் பொருளாதார நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு கடற்றொழில் நீரியல்துறை அமைச்சு நேற்று முன்தினம் முதல் ஆழ்கடல் மீன்பிடி அதிவேக இழுவைப் படகுகளில் மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு இழுவைப் படகுகள் அனுமதிக்கப்பட்டுள்ளதனால் கடற்றொழிலாளர்கள் இந்திய எல்லைப் பகுதிக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் என மீனவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு இழுவைப் படகுகளை பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்ட இந்த அனுமதியானது தொடர்ந்து நீடிக்குமா அல்லது உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவடைந்த பின்னர் இந்த அனுமதி மீண்டும் இரத்துச் செய்யப்படுமா என்ற கேள்வியும் கடற்றொழிலாளர்கள் மத்தியில் எழுப்பப்பட்டுள்ளது. (எ)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.07 07

★ 1807-பிரான்சின் நெப்போலியனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அமைதி உடன்பாடு ரஷ்யாவின் டில்சிட் என்ற இடத்தில் எட்டப்பட்டது.

★ 1865-ஆபிரகாம் லிங்கன் கொலையில், குற்றவாளிகளான நான்கு பேர் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1896-இந்தியாவில் முதற்தடவையாக மும்பையில் திரைப்படம் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1898-ஹவாய் தீவை ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கும் முடிவில் ஜனாதிபதி வில்லியம் மக்கின்லி கைச்சாத்திட்டார்.

★ 1917-ரஷ்யப் புரட்சி: ரஷ்யாவின் இடைக்கால அரசின் பிரதமர் இளவரசர் கியோர்கி லுவோவ் பதவியைத் துறந்தார். அலெக்சாண்டர் கெரென்ஸ்கி பிரதமரானார்.

★ 1937-பசுபிக் போர்: ஜப்பானியப் படைகள் சீனாவின் பீஜிங் நகரை அடைந்தன.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் தலையீட்டைத் தடுப்பதற்காக அமெரிக்கப் படைகள் ஐஸ்லாந்தில் தரையிறங்கின.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: பெய்ரூட் நகரம் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டது.

★ 1959-வெள்ளிக் கோள் ரெகூலஸ் என்ற விண்மீனை மறைத்தது. இந்நிகழ்வு வெள்ளியின் விட்டம் மற்றும் அதன் வளிமண்டலம் போன்றவற்றை அளக்க உதவியது.

★ 1967-பயாபிராவில் உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.

★ 1969-கனடாவில் பிரெஞ்சு மொழியும் ஆங்கிலத்துடன் இணைந்து அதிகாரபூர்வ மொழியாக அங்கீகரிக்கப்பட்டது.

★ 1978-சொலமன் தீவுகள் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 2005-லண்டனில் 4 சுரங்கத் தொடரூந்து நிலையங்களில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளில் 56 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006-சீனாவில் சுரங்கம் தோண்டுவதற்காக வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த வெடிபொருள் வெடித்ததில் 43 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2007-புதிய ஏழு உலக அதிசயங்கள் பட்டியல் வெளியிடப்பட்டது. இந்தியாவின் தாஜ் மகால் புதிய 7 உலக அதிசயங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1947-ஞானேந்திரா, நேபாளத்தின் கடைசி மன்னர்

★ 1981-மகேந்திர சிங் தோனி, இந்தியத் துடுப்பாளர்

### இறப்பு

★ 1930-ஆர்தர் கொனன் டொயில், துப்பறியும் புனைகதை எழுத்தாளர் (பி.1859)

### சிறப்பு நாள்

★ சொலமன் தீவுகள் சுதந்திர தினம் (1978)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்

"எனக்கு 70 வயதாகிறது. தனியாரிடம் வேலை செய்ததால் எனக்கு பென்ஷன் தொகை எதுவும் வருவதில்லை. என் மகன் என்னை நன்றாகத்தான் கவனித்துக் கொள்கிறான். ஆனாலும் அடுத்தவர் தயவில் வாழ்வதால் கண்ணியம் இழந்து விட்டதாக உணர்கிறேன். சாப்பாடு இறங்க மாட்டேன் என்கிறது!"

## ஆன்மீகம் 42

இந்த உலகில் மிக மேன்மையாக வாழ்ந்த மனிதர்கள் பெரும்பாலும் தங்கள் உணவை இரந்துதான் சாப்பிட்டார்கள். சிவனே கையில் பிச்சைப் பாத்திரத்துடன்தான் வளைய வருகிறான். நீங்கள் வணங்கும் பெரும்பாலான யோகிகள் மற்றவர் கொடுத்துத்தான் புசிக்கிறார்கள். புத்தரும் உணவுக்காக கையேந்தியவர்தான். நான்கூட அடுத்தவர் வழங்குவதைத்தான் உண்கிறேன்.

சம்பாதித்தது மட்டும்தான் உபயோகமான செயல் என்று நினைக்காதீர்கள். அதைவிடப்பல விதங்களில் மற்றவருக்கு பயனுள்ளவராக நீங்கள் இருக்கமுடியும்.

உங்கள் உடலில் இன்னமும் இருக்கும் சக்தியையும் நீங்கள் கடந்து வந்த அனுபவங்களையும் எந்த அளவுக்கு மற்றவர்களுக்கு பயன்படுத்த முடியும் என்று பாருங்கள்.

"நீங்கள் என் நிலையைப் புரிந்து கொள்ளவில்லை. அறுபது வயதுவரை குடும்பத்துக்குச் சம்பாதித்துப் போட்ட கைகள் இவை. சொந்தக்கால்களில் நின்று பழகியவன் நான். மகன் சம்பாத்தியத்தில் உட்கார்ந்து சாப்பிடுவது. மனதை நெருடுகிறதே?"

எப்பொழுதும் உங்கள் கை ஓங்கியே இருக்வேண்டும் என்று அகங்காரமாக நினைக்காதீர்கள். வழங்குவதில் மட்டுமல்ல பெறுவதிலும் கண்ணியம் இருக்கிறது. பெறுவதில் உள்ள மேன்மையை உணராதவர்கள், வாழ்க்கையின் முழுமையைப்புரிந்து கொள்ளத் தவறியவர்கள்.

வாழ்க்கையில் பல மேன்மையான விடயங்களை அடைவதற்கு அவை வழங்கப்படும்போது தலை நிமிர்ந்து நில்லாமல், பணிந்து பெறுவதற்கான மனநிலை வேண்டும்.

'என் உணவை நானே ஈட்டிக் கொள்வேன்' என்கிற தீர்மானம் 18,20 வயதில் இருக்கலாம்; இருக்க வேண்டும். உங்கள் இரத்த நாளங்களில் வாலிபத்தின் ஹோர்மோன்கள் பாயும்போது சொந்தக்கால்களில் நிற்கவேண்டும் என்ற தீர்மானம் அவசியம்.

நீங்கள் சம்பாதித்தபோதும், உங்கள் உணவுக்காக மற்றவர் கைகளை நீங்கள் சார்ந்துதான் இருந்தீர்கள். உங்களுக்கான உணவை நீங்களா உருவாக்கினீர்கள்? அதை விலை கொடுத்து வாங்கும் திறனை மட்டும்தானே நீங்கள் கொண்டிருந்தீர்கள். பொருளாதாரத்தை முன் வைத்தே வாழ்க்கையை வாழக்கற்றுக் கொண்டதால் வந்திருக்கும் குழப்பம் இது.

உங்கள் தாயும் மனைவியும் தங்கள் கண்ணியத்தை இழந்துதான் உங்கள் சம்பாத்தியத்தில் உண்டார்களா? உங்கள் குழந்தைகள் நீங்கள் அளித்த உணவை மகிழ்ச்சியோடு சாப்பிட்டார்களே, அவர்களையும் கண்ணியம் அற்றவர்களாக கருதித்தான் பராமரித்து வந்தீர்களா?

யார் உணவைக் கொண்டு வருகிறார்கள் என்பதில் இல்லை வாழ்க்கை.

புத்தர் அரசனாக வாழ்ந்த போது இருந்ததை விட, தெருவில் இரந்து உண்டபோதுதான் அதிக கண்ணியத்துடன் இருந்தார் என்பதை மறக்காதீர்கள்.

"மற்றவர்களுக்குப் பாரமாக இருக்கிறோமே என்று நிம்மதியற்றுத் தவிக்கும் என்மனதை சமாதானம் செய்வது எப்படி?"

உங்கள் உணவை நீங்கள் சம்பாதித்துக்கொண்டு இருந்த போது மட்டும் பூரண நிம்மதியாக இருந்திருக்கிறீர்களா? நிச்சயமாக மாட்டீர்கள். நிம்மதி என்பது யார் சம்பாதிக்கிறார்கள் என்பதில் இல்லை; அது எங்கே இருக்கிறது என்பதை அறிவதில்தான் இருக்கிறது. அதை உணராமலேயே வாழ்க்கையின் பெரும் பகுதியை வீணடித்து விட்டீர்கள்.

## உணவு என்பது உடலுக்குத்தான்

உணவு என்பது உடலுக்குத்தான். அதை நீங்கள் சம்பாதித்துக் கொடுத்தாலும், அடுத்தவரிடம் இரந்து உண்டாலும், உங்கள் உடல் தன் திறனை ஒரு கட்டத்தில் இழந்து விடும்.

தன் வீட்டுக்கு வந்திருந்த விருந்தாளியிடம் ஒரு முதியவர் "நேற்று நானும் என் மனைவியும் ஒரு ஹோட்டலில் சாப்பிட்டோம்.. பிரமாதமான உணவு. அருமையான ருசி" என்றார்.

"எந்த ஹோட்டல்" என்றார் விருந்தாளி.

சட்டென நினைவுக்கு வராமல், முதியவர் நெற்றி சுருங்கி, "அட தண்ணீரில் பூக்குமே... அதன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"அல்லி!"

"இல்லையப்பா... இன்னொரு பூ... நிறைய இதழ்கள் இருக்கும்?"

"தாமரை"

"அதற்கு இன்னொரு பெயர் இருக்கிறதே?"

"கமலம்!"

முதியவர் முகம் மலர்ந்தது. 'கரெக்ட்' என்றவர் உள்ளே திரும்பிக் குரல் கொடுத்தார். "கமலா ... நேற்றுப்போனாமே, அந்த ஹோட்டலின் பெயர் என்ன?"

உடலின் திறன் இப்படி மூப்பில் தேய்ந்துதான் போகும் மனதில் நினைவுகள் கலைந்துதான்போகும். இறுதிவரை அதே சக்தியுடன் விளங்கக்கூடியது உங்கள் உயிர்ச்சக்திதான். எனவே உடலுக்குத் தேவையான உணவைப் பற்றிப் பேசுவதை நிறுத்துங்கள். உணவை யார் கொண்டு வருகிறார்கள் என்பது முக்கியம் அல்ல; கொடுக்க வேண்டும் என்ற அகங்காரத்தில் கவனத்தை அலையவிடாமல் 70 வயதிலாவது உங்களுக்குள்ளே கவனிக்க ஆரம்பியுங்கள்.

உடலின் உள்ளே இருந்து இயங்குவது எது என்பதை இத்தனை வருடங்களாக உணரத் தவறிவிட்டீர்கள். இப்போதாவது அதில் உங்கள் கவனம் திரும்பட்டும். அந்த அமுதம் ருசிக்கட்டும்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# சிறுகதை வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்கு 03

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

**-நந்தவனம் சந்திரசேகரன்**

இதே காலகட்டத்தில் ஜெகாந்தன் எழுதிய சிறுகதைகளும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. முற்போக்கான கதைகளைப் படைத்த இவர் தொடக்கத்தில் சோதனை ரீதியாகவும் பின்னர் ஜனரஞ்சகமாகவும் கதைகள் படைத்துள்ளார்.

சிறுகதை வளர்ச்சியின் நான்காம் காலகட்டம் என்று பார்த்தால் 1976 லிருந்து இன்று வரையில் மிகப் பெரிய பரிணாங்களுடன் சிறுகதைகள் வளர்ச்சியடைந்துள்ளன. நான்காம் காலகட்டத்தில் சா.கந்தசாமி, இந்திரா, பார்த்தசாரதி, ந.முத்துசாமி, அசோகமித்திரன், நீலபத்மநாதன், வண்ணநிலவன், வண்ணதாசன், சுஜாதா, பாலகுமாரன், பிரபஞ்சன் போன்றவர்கள் பல சிறந்த சிறுகதைகளை தந்திருக்கின்றனர்.

நான்காம் காலகட்டத்திற்குப் பிறகுதான் சிற்றிதழ்கள் சிறுகதைகள் அபாரா வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றன. வானம்பாடி காலத்திலிருந்தே சிற்றிதழ்கள் ஒரு இயக்கமாக இயங்கத் தொடங்கிவிட்டன.

சிற்றிதழ்களின் இயக்கம் என்பது அடிப்படையில் வணிக கலாசாரத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் ஆரோக்கியமான கலாசாரத்தை வளர்த்தெடுக்கும் இயக்கமாகத்தான் இயங்கி இருக்கின்றன. இன்றுவரையில் அதே வழியில்தான் சிற்றிதழ் இயக்கங்கள் இயங்கி வருகின்றன.

இயக்கமாக இயங்கிய சிற்றிதழ்களில் சிறுகதை வளர்ச்சிக்கு மிகுந்த அக்கறை காட்டி வந்திருக்கின்றன. பல சிறந்த முத்திரைக்கதைகள் சிற்றிதழ்களில்தான் வெளியாகி இருக்கின்றன.

சிறு கதைகளை வளர்த்தெடுத்த இதழ்களின் பட்டியல் என்று பார்த்தோமானால் சுனையாழி, காலச்சுவடு, முங்காரி, சுகன், உங்கள் பாரதி, செம்மலர், விசை, தீராந்தி, பயணம் இவற்றோடு இனிய நந்தவனம், மகாகவி, முகம் என இப்படி பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

இன்றைய சூழலில் காட்சி ஊடகங்களின் வருகையால் வாசிப்புப் பழக்கம் சற்று குறைந்துள்ளதாக சொல்லப்பட்டாலும் பல சிறந்த சிறுகதைகள் சிற்றிதழ்களில் வெளியாகி வரவேற்பைப் பெற்று வருகின்றன என்பதையும் மறுக்க முடியாது.

சிற்றிதழ்களில் வெளியான கதைகள் சிறந்த கதைகளாகவும் பேசப்பட்டு வருகிறது. வரலாற்று சிறப்புமிக்க சிறுகதைகளை வெளியிட்ட பெருமை சிற்றிதழ்களுக்கே உண்டு. பல சோதனை முயற்சியான சிறுகதைகளை சிற்றிதழ்களே வெளியிட்டிருக்கின்றன. இனிவரும் காலங்களில் சிற்றிதழ்களின் வரலாறு எழுதப்படும் போது அதில் சிற்றிதழ்களின் பங்களிப்பு மிக அதிக அளவில் இருக்கும்.

ஒரு பக்கக் கதைகள் நிமிடக் கதைகள் என்று வணிக இதழ்களில் சிறுகதைகளின் வளர்ச்சி அருகிப் போய்விட்ட நிலையில் சிற்றிதழ்கள் மட்டுமே இன்று சிறுகதைகளை வளர்த்து வருகின்றன என்ற உண்மையை நாம் மறுக்க முடியாது. வருங்காலங்களிலும் சிற்றிதழ்கள்தான் சிறுகதை வளர்ச்சியில் அதிக முக்கியத்துவம் பெறும் என்பதையும் இங்கே பதிவுசெய்து விடை பெறுகிறேன்.

பொருளாதார அடிப்படையில்தான் மக்கள்வரலாற்றை நோக்க வேண்டும்; அப்பொழுதுதான் வரலாற்று நிகழ்ச்சிகளுக்குச் சரியான விளக்கம் கொடுக்கமுடியும் என்று 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கார்ல்மாக்ஸ் ஒரு புதிய கண்ணோட்டத்தை வரலாற்றுத் தத்துவத்துக்கு அளித்தார். இந்தக் கண்ணோட்டத்தில் பாக்கும் போது தான் சமுதாய அடிப்படையையே நாம் பார்க்கிறோம் என்று கூறினார். இந்தக் கண்ணோட்டத்திற்றான் கோசாம்பியும் சட்டோ பாத்தியாயரும் இந்திய வரலாற்றை அணுகினார்கள். இப்பொருள் முதல்வாத அடிப்படையில் இலங்கை வரலாறு இன்னும் எழுதப் படவில்லை என்றே கூறலாம்.

–முகம்மது சமீம்

(முற்றும்)

# — கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் —
# வாகன இலக்கத் தகடுகள் விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் போக்குவரத்து கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான வாகன இலக்கத்தகடுகளில் ஒரு தொகுதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவற்றின் உரிமையாளர்கள் அலுவலக நேரத்தில் நேரில் சமுகம் தந்து இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

வருகைதரும் போது வாகன பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி, அதன் புகைப்படப் பிரதி, தேசிய அடையாள அட்டை, பழைய இலக்கத் தகடுகள் (பழைய பதிவேடுகளுக்கு மாத்திரம்) என்பவற்றை கொண்டு வருமாறும் அவர் அறிவித்துள்ளார். இலக்கத் தகடுகளின் விபரம் வருமாறு,

HS3261, JD2956, GK5857, JI 8049, HH1972, GB6935, JA2692, HN3580, JR0244, QG0050, GS9196, NC9998, ND4959, LB5412, HA5494, HO9748, GR5908, HQ7170, HF3050, NA0858, GV1366, QF0270, GO0091, HS7316, GU9938, NA0890, HV4337, JK3165, NC4210, QH0837, YA6217, QZ7496, QX9068, GG9788, QM9642, QF9416, JC6608, HQ7859, NC6253, HK2838, PD7676, PC5409, HF3769, JC7843, GR0348, NC3998, JI6743, JZ7364, GZ8063, HT3637. (ஸ்ரீ)

# அவசர காலச்சட்டம் 56 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

(கொழும்பு)

அவசரகாலச்சட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் 56 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 95 வாக்குகளும் எதிராக 39 வாக்குகளும் கிடைக்கப் பெற்றதையடுத்து பிரேரணை மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதாக பிரதி சபாநாயகர் சந்திமவீரக்கொடி அறிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை நேற்று முன்தினம் சபையில் பிரதமர் தி.மு.ஜயரட்னவினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இருதரப்புவாத பிரதிவாதங்களின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எம்.பி.யுமான ஆர்.சம்பந்தன் பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடுமாறு சபையில் கேட்டுக் கொண்டார்.

இதன் பிரகாரம் கோசம் ஒலிக்கப்பட்டு பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 95 வாக்குகள் கிடைக்கப்பெற்றன.

ஐக்கிய தேசியக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜனநாயக தேசியக் கூட்டணி ஆகியவற்றைச் சேர்ந்த எம்.பி.க்கள் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

இதன் பிரகாரம் 39 வாக்குகள் கிடைக்கப்பெற்றன.

இதன் போது பிரேரணை மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதாக சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி அறிவித்தார். (ஸ்ரீ-2)

# சுனாமி எச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு

சுனாமி எச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மணற்குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவில் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வட பிராந்திய அனர்த்தமுகாமைத்துவ இணைப்பாளர் க. வைரமுத்து தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வு ஒத்திகை நிகழ்வாகையால் மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் எதிர்வரும் காலங்களில் சுனாமி ஏற்படும் போது மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது சம்பந்தமான ஒத்திகை நிகழ்வு எனவும் அவர் குறிப்பிட்டார்.

இக்கிராமத்தில் ஏற்பட்ட கடந்த கால சுனாமி அழிவை கருத்திற் கொண்டு இப்பிரதேசத்தில் சுனாமி எச்சரிக்கை கோபுரம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3)

# பொன்சேகாவின் மேன்முறையீடு ஓகஸ்ட் 4 இல் விசாரணை

(கொழும்பு)

சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேலும் இரண்டு மனுக்கள் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஏற்கனவே விசாரணைகள் இடம்பெறுவதாக பொன்சேகா சார்பாக பிரசன்னமாகியிருந்த சட்டத்தரணி எராஜ் டி சில்வா நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இதன் காரணமாக இந்த மனுவை விசாரிப்பதற்கு திகதியொன்றை நிர்ணயிக்கும் பொருட்டு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி மனுவை அழைக்குமாறும் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்டமா அதிபர் சார்பாக நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த பிரதி சொலிஸ்டர் ஜெனரல் இதற்கு இணங்கியதை அடுத்து இந்த மேன்முறையீட்டை ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதிக்கு பிற்போட நீதிமன்றம் தீர்மானித்தது.

சரத் பொன்சேகாவின் பதவி அதிகாரங்களை நீக்குவதற்கு இராணுவ நீதிமன்றம் எடுத்த தீர்மானத்தை ஆட்சேபித்து இந்த மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கிளிநொச்சி மக்கள் வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்த நிறைவினால் ஏற்பட்டுள்ள நிலைமைகளை கிளிநொச்சி மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பல் தசாப்த காலமாக மறுக்கப்பட்டு வந்த பல வாய்ப்புக்கள் தற்போது கிளிநொச்சி மக்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் கிளிநொச்சியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அலுவலக ஆரம்ப நிகழ்வுகளில் கலந்து கொண்ட போது இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார மற்றும் சமூக ரீதியான அபிவிருத்தியை எட்டுவதற்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர் பிரதேசத்தில் பாரியளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ரிசானாவுக்கான இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு அரசாங்கம் தயார்

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரிசானா நபீக்கை விடுவிப்பதற்கு உயிருக்கான இழப்பீடாக எவ்வளவு தொகையை என்றாலும் செலுத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது என வெளிநாட்டு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ரிசானா நபீக் மீதான மரண தண்டனை நிறைவேற்றப்படுவதை நிறுத்துவதற்காக ஜனாதிபதி தலையீடு செய்த போதிலும் சவுதி அரேபிய சட்டத்தின் பிரகாரமே உயிரைக்காப்பாற்ற முடியுமென அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித்குமார பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த போதே அமைச்சர் டிலான் பெரேரா இந்தக் கருத்தினை கூறினார். (ஸ்ரீ-2)

# வரட்சி காரணமாக நீர்மின் உற்பத்தி நடவடிக்கைகளில் சிக்கல் நிலை

நீர் மின் உற்பத்தி பயன்படுத்தப்பட்டுள்ள நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் 25 வீதம் வரை குறைவடைந்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க குறிப்பிடுகின்றார்.

காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 9 வீதம் வரை குறைவடைந்துள்ளமையினால் இரவு நேரங்களில் மின்சாரத்தை விநியோகிப்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது நாட்டில் நிலவுகின்ற வரட்சி காரணமாக நீர்மின் உற்பத்தி நடவடிக்கைகளில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. நீர்மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் தற்போது குறைவடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த நீர்மட்டம் 15 வீதமாக குறைவடைந்தால் நீர்மின் உற்பத்தியை மேற்கொள்ள முடியாது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டுகின்றார்.

லக்ஷபான, மவுசாகலை மற்றும் காசல்ரீ நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளது. (ஸ்ரீ-2)

## கும்பாபிஷேகம்

கிளிநொச்சி முரசுமோட்டை (ஈழத்துக் காசிசேத்திரம்) அருள்மிகு ஸ்ரீ அன்னபூரணி அம்பாள் சமேத சிவலிங்கேஸ்வரப் பெருமாள் திருக்கோவில் (சங்கரநாரயணர் கோவில்) கும்பாபிஷேகம் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.47 மணிமுதல் 10.27 மணிவரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தலாம். (ஸ்ரீ)

# கொழும்பில் வாகன நெரிசலை கட்டுப்படுத்த விசேட திட்டம்

(கொழும்பு)

கொழும்பு மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்கான விசேட திட்டமொன்று செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய காலி வீதி மற்றும் டுப்ளிகேஷன் வீதியில் தற்போது நடைமுறையில் உள்ள போக்குவரத்து திட்டத்தை, காலி வீதி-டிக்மன் சந்தி வரையும், டுப்ளிகேஷன் வீதி, டிக்மன் சந்தி வரையும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன்போது டுப்ளிகேஷன் வீதியில் வஜிரா வீதி சந்தியில் இருந்து டிக்மன் வீதி சந்தி வரையிலான பகுதியிலும் காலி வீதியின் டிக்மன் வீதி சந்தியில் இருந்து பம்பலப்பிட்டி வரையிலும் இந்த விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

காலி வீதியூடாக கொழும்பிற்குள் பிரவேசிக்கின்ற அனைத்து வாகனங்களும், டிக்மன் வீதி சந்தியில் இருந்து பம்பலப்பிட்டி நோக்கி வரக்கூடிய வகையில் இரண்டு வழிகளும் திறந்து விடப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜெயக்கொடி குறிப்பிட்டார்.

டுப்ளிகேஷன் வீதியில் வஜிரா வீதி சந்தியிலிருந்து, டிக்மன் வீதி சந்தி வரையிலுமுள்ள வீதியின் இரு வழிகளும் திறந்துவிடப்பட்டுள்ளன.


காலி வீதியூடாக டுப்ளிகேஷன் வீதிக்குள் பிரவேசிக்கும் வாகனங்களின் வசதி கருதி இதன் மூலம் நான்கு குறுக்கு வீதிகள் திறந்து விடப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

அத்துடன் டுப்ளிகேஷன் வீதியூடாக காலி வீதிக்குள் பிரவேசிக்கும் வகையிலும் பல மாற்று வழிகள் திறந்து விடப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிகாட்டியுள்ளார்.

ஹவ்லொக் வீதியிலிருந்து நேரடியாகவே காலி வீதிக்குள் வாகனங்கள் வர முடியும் என கூறிய அவர் இந்த விசேட போக்குவரத்து திட்டம் நடைமுறையில் இருக்கும் போது சாரதிகளுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக பொலிஸ் போக்குவரத்து அதிகாரிகளை கடமையில் ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# நாட்டை நேசிக்கும் உணர்வினை பாடசாலை மட்டத்திலிருந்தே ஏற்படுத்த வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

தாய்நாட்டை நேசித்து அதன் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் உணர்வினை பாடசாலை மட்டத்திலிருந்தே மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி தர்மராஜ் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்கள் மத்தியில் கலந்துரையாடுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

திறமையுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கான வளர்ச்சிக்கு அரசாங்கம் உரிய வழிவகைகளை மேற்கொள்ளும். விளையாட்டுத்துறையில் திறமை படைத்தவர்களை பல்கலைக்கழகத்துக்கு அனுமதிப்பதிலும் விசேட கவனம் செலுத்தப்படும்.

நான் பதவியேற்றதும் மாணவர்களுக்கு வாக்குறுதியொன்றை வழங்கினேன். அறிவிலும் நல்லொழுக்கத்திலும் சிறந்த எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதே அந்த வாக்குறுதியாகும். அத்துடன் சிறந்த ஆரோக்கியமான எதிர்கால பரம்பரையை உருவாக்குவது அவசியம் எனவும் வலியுறுத்தினேன். அதற்கான செயற்றிட்டங்களையே அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

சுதந்திரமாக மாணவர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத யுகம் ஒன்று இருந்தது. நாம் அதற்கு முற்றுப்புள்ளி வைத்தோம். சந்தேகம் பயமின்றி மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லக் கூடிய சூழலை ஏற்படுத்தியுள்ளோம். அதே வேளை நாட்டையும் பெரியோரையும் மதித்து நல்லொழுக்கத்துடன் முன்னேறக்கூடிய இளைய சந்ததியை உருவாக்குவது எமது பொறுப்பாகும். இதற்கு ஆசிரியர்களின் பங்களிப்பு அவசியமாகும்.

பிள்ளைகள் பெற்றோர்களிடம் இருப்பதை விட அதிக நேரத்தை பாடசாலையில் ஆசிரியர்களுடனேயே கழிக்கின்றனர். அவர்கள் பெற்றோர்கள் சொல்வதை விட ஆசிரியர்கள் சொல்வதையே ஏற்றுக் கொள்கின்றனர். அதனால் மாணவர்களை சரியான வழியில் உருவாக்கும் பாரிய பொறுப்பு ஆசிரியர்களுக்கே உள்ளது.

காலத்திற்குப் பொருத்தமான மாணவர்களை உருவாக்குவதில் சிறந்த செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். நாட்டை நேசிக்கும் உணர்வினை பாடசாலை மட்டத்திலேயே ஏற்படுத்த வேண்டியது அவசியம். அதற்கான சூழலை உருவாக்குவதும் ஆசிரியர்களுடைய பொறுப்பாகும் என்றார். (ஸ்ரீ-2)

# மக்கள் வங்கியின் பொன்விழா-2011

## மக்கள் வங்கி விருட்சமாகி வெற்றி நடை போடுகிறது



எமது தேசத்தின் வங்கி வரலாறு 183 வருட காலத்தைக் கொண்டது. 1961ஆம் ஆண்டு முன்னாள் பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் உருவாக்கப்பட்ட புதிய அரசாங்கத்தில் வர்த்தக அமைச்சரான ரி.பி.இலங்கரட்ன அவர்களால் முன்மொழியப்பட்ட பிரேரணையின் அடிப்படையில் மக்கள் வங்கி, கூட்டுறவு வங்கிகளை இணைத்து உருவாக்கப்பட்டது. வங்கியின் சின்னம் (Logo) கே.பி அலுடெனியாவால் வரையப்பட்டு இன்றுவரை மாற்றமடையாது இருக்கின்றது. எல்லா இன மொழி மக்களையும் ஒன்றுபடுத்தி இயங்க வைத்த முதலாவது அரச வங்கி என்ற பெயரை பெற்றிருக்கின்றது. இலங்கையில் மூன்று மொழிகளையும் உள்ளடக்கிய முதலாவது காசோலையை வெளியிட்ட பெருமை இந்த வங்கிக்கு உரியதாகும். 50 வருடமாகி பொன்விழாவைக் கொண்டாடும் வங்கி எமது வங்கி வரலாற்றில் நிரந்தரமான இடத்தைப் பெற்றுவிட்டது.

வங்கியின் முதல் தலைவராக வின்சன் சுபசிங்க 1961ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். முதலாவது பொதுமுகாமையாளராக வில்மா எச். சொலமன்ஸ் நியமனமானார். இதுவரை 16 தலைவர்களும் 15 பொது முகாமையாளர்களும் வங்கியை மக்கள் மனமறிந்த வங்கி என்ற மகுட வாசகத்துடன் வழிநடத்திச் சென்றுள்ளனர்.

பொன்விழாக் கொண்டாடும் இந்தச் சந்தர்ப்பத்தில் முதன்முறையாக வரலாற்றில் பொதுமுகாமையாளராக அ.வசந்தகுமார் நியமனம் பெற்றுள்ளமை தமிழர்கள் எல்லோருக்கும் பெரும் மதிப்பைக் கொடுத்துள்ளது. அலரிமாளிகையில் நடைபெற்ற 50ஆவது ஆண்டு விழாவில் மக்கள் வங்கித் தலைவர், தமிழர் ஒருவர் நியமனம் பெற்றதைப் பற்றி மிகவும் புகழ்ந்து பாராட்டினார். அப்பொழுது நானும் பெருமகிழ்ச்சியடைந்தேன்.

வங்கியானது கிராமிய மட்டத்தில் அதிகளவுக்குக் கடன் சேவைகளை வழங்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல்வேறு வகையான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. 686 கிளைகளுடன் நாடு முழுவதும் வலைப்பின்னலை உருவாக்கி மொத்தச் சொத்தாக ரூபா 550 பில்லியனும் அத்துடன் வருடாந்த இலாபமாக 2010 இல் 4.7 பில்லியன் ரூபாவைப் பெற்றிருக்கின்றது. ஏறத்தாழ 13 மில்லியன் கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. ஒரு பலம் வாய்ந்த விருட்சமாக வங்கி சென்று கொண்டிருப்பதனை எம்மால் காணக்கூடியதாக இருக்கின்றது.

கால சூழல்களுக்கு ஏற்ப நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்து புதிய பலவகையான இலத்திரனியல் சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றது. பொன்விழாக் காணும் இந்தக் காலகட்டத்தில் வங்கியிலுள்ள நிர்வாகிகள், உத்தியோகத்தர்கள் எல்லோரையும் நான் எனது மனதார வாழ்த்துகின்றேன். நீங்கள் எல்லோரும் நேர்மையாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டமையும் வாடிக்கையாளர்களை அரவணைத்துச் சேவை வழங்கியதுமே உங்கள் வங்கியின் பலத்தை அதிகளவுக்கு உயர்த்தி ஒரு விருட்சமாக காண்பிக்கின்றது. வங்கியின் சேவை வெற்றியுடன் தொடரட்டும். எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

*பேராசிரியர் மா.நடராசசுந்தரம், தலைவர், நிதி முகாமைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.*

# மாணவர்களின் ஆக்கிரமிப்பிலிருந்த பல்கலைக்கழக நிர்வாகம் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது

## உயர் கல்வியமைச்சர் தெரிவிப்பு

இரண்டு தசாப்தங்களாக மாணவர்களின் ஆக்கிரமிப்பிலிருந்த பல்கலைக்கழக நிர்வாகத்தை கடந்த வருடம் முதல் பீடாதிபதிகளினதும் துணைவேந்தர்களினதும் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்ததாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ரத்மனால பிரிஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சியின் 2 ஆம் கட்டத்திற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 1988 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒடுக்கு முறையின் பின்னர் பல்கலைக்கழக நிர்வாகம் ஸ்தம்பிதம் அடைந்தது.

உலகின் முன்னணி 4 ஆயிரம் பல்கலைக்கழகங்களில் இலங்கையின் எந்தப் பல்கலைக்கழகமும் உள்வாங்கப்படவில்லை.

இலங்கையின் பல்கலைக்கழகங்களை சர்வதேச தரம்வாய்ந்த பல்கலைக்கழகங்களாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் அமைச்சர் கூறினார்.

பல்கலைக்கழக பாடநெறிகளுக்கும் வேலைவாய்ப்புக்களுக்கும் பாரிய இடைவெளி காணப்படுகிறது.

சர்வதேசத்துடன் தொடர்பு கொள்ளும் போது புதிய பாடநெறிகளை அறிமுகம் செய்ய வேண்டுமென்றும் பாடநெறிகள் ஆங்கில மொழியில் கற்பிக்க வேண்டுமென்றும் அமைச்சர் கூறினார்.

93 சதவீதமான பல்கலைக்கழக மாணவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபட ஆர்வம் காட்டுவதில்லை எனவும் உளநலத்துடன் உடல்நிலைவலுவும் மாணவர்களிற்கு அவசியமானதென்று அமைச்சர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# சவுதி இளவரசருக்கு அமைச்சர் பீரிஸ் கடிதம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண் ரிஷானா நபீக் விடயம் தொடர்பாக சவுதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் இளவரசர் சௌட் பின் பயிசல் பின் அப்துல் அசிஸ் அல் சௌட்டுக்கு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கடிதம் அனுப்பியுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி அனுப்பி வைத்துள்ள இக்கடிதத்தில் ரிஷானா நபீக்கின் விடுதலை தொடர்பாக வலியுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# உன்னத சேவை சிறக்க வாழ்த்து



மக்கள் வங்கி என்ற பெயருக்கு ஏற்புடையதாக நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் நகரம், பட்டினம், கிராமம், குறிச்சி என்ற வேறுபாடு இன்றிவாழும் மக்களின் அபிமானத்துக்கு உரியதாக விளங்குவது மக்கள் வங்கி.

விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், சிறுகைத்தொழிலாளர்கள், சிறுவர்த்தகர்கள், சராசரி வருமானம் பெறுவோர் உட்பட்ட சகல தரப்பு மக்களினதும் காலடிக்குச் சென்று சேவையாற்ற வேண்டும் என்ற இலக்குடன் அந்நாள் அமைச்சர் ரி.பி. இலங்கரத்தினாவும் அவர் அங்கம்வகித்த அரசும் தூரநோக்குடன் ஆரம்பித்ததே மக்கள் வங்கி.

அவர்களின் சிந்தனை, செயல் வடிவம் பெற்று மேற்கூறிய சகல தரப்பு மக்களினதும் செல்லப்பிள்ளையாக இப்போது வளர்ந்து நிற்கின்றது மக்கள் வங்கி. மக்களுடன் ஒன்றித்து விட்ட வங்கிகளில் ஒன்றாக அது நிமிர்ந்து நிற்கின்றது.

ஒரு காலத்தில் நகரப்புறங்களைச் சேர்ந்த பெரும் பணக்காரர்கள், வர்த்தகப் புள்ளிகளுக்கு மட்டுமே உரித்தானதாகக் கருதப்பட்ட வங்கிச் சேவையை, முதன் முதலில் பல மட்டங்களைத் தாண்டி கிராம மட்டம் வரை எடுத்துச் சென்ற பெருமை மக்கள் வங்கிக்கே உரியது.

கீழ்த்தட்டு மக்களைத் தேடிச் சென்று, அவர்களுக்கெனப் பல கடன் வசதித் திட்டங்களை வகுத்து, அவர் தம் வாழ்க்கை நிலையை உயர்த்திய உத்தமத் தோழன் மக்கள் வங்கி என்பது மிகையல்ல. அதனால் எவரும் கிட்டச் செல்லக் கூடிய கிராமங்களின் நண்பனாகி மிளிர்கின்றது.

குடாநாட்டு மக்களைப் பொறுத்தவரையில் போர்க்காலத்திலும் தனது சேவையை மக்கள் மனம் குளிர வழங்கிய மக்கள் வங்கியின் சிறப்புச் சேவையை அவர்கள் மறக்கமாட்டார்கள்.

இப்போது பல வங்கிகள் குடாநாட்டில் கால் பதித்துச் சேவையாற்றினாலும் மக்கள் வங்கியின் சிறப்புறு சேவையை எமது பிரதேசத்தவர்கள் முன்னிலைப்படுத்தியே நோக்குவர்; மதிப்புத் தருவர்.

மக்கள் வங்கி, மக்களின் மனம் நிறைந்த வங்கி என்பது மட்டுமன்றி மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்குக் கைகொடுக்கும் தோழன் எனக் கூறினாலும் அது புகழ்ச்சியன்று. அத்தகு சிறப்புமிக்க மக்கள் வங்கி, வடக்கு மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு மேலும் பல்லாண்டுகள் வளம் சேர்க்க வாழ்த்துகின்றோம்.

யாவர்க்குமாம் வங்கியின் நற்சேவை- என்று எமது மக்களுக்கு வளமும் நலமும் சேர்க்க மக்கள் வங்கி தனது உன்னத சேவையைத் தொடரட்டும், உயரட்டும்.

*இங்ஙனம்*

*ஈ.சரவ்ணபவன், நிர்வாக இயக்குநர், உதயன்.*

*சி/3667*

# டெங்கு மரணத்திற்கு பொறுப்பான அலுவலரை படுகொலை செய்வேன்

## அமைச்சர் மேர்வின் எச்சரிக்கை



(கொழும்பு)

இலங்கையின் களனி தேர்தல் தொகுதியில் டெங்கு நோயால் எவரேனும் ஒருவர் உயிரிழப்பதாக இருந்தால் அம்மரணத்துக்கு காரணமாக இருக்கின்ற அலுவலரை படுகொலை செய்வேன் என பொது மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

களனித் தொகுதியில் முன்னெடுத்து வருகின்ற டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் குறித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் போதே அவர் கூறினார்.

டெங்கு மரணத்துக்கு காரணமான அலுவலரைப் படுகொலை செய்துவிட்டு தற்கொலை செய்து கொள்வேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(மல்லாவி)

இலங்கை முதலுதவி சங்கத்தினால் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளிலுள்ள முதலுதவிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு நாளை காலை 9.30 மணிக்கு மாங்குளத்திலுள்ள ஆசிரியர் வள மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கிற்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத்தவறாது கலந்து கொள்ளுமாறு துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் கேட்டுக் கொள்கின்றார். (ஸ்ரீ-15)

# ஈராக் இரட்டை குண்டுவெடிப்பு
# 35 பேர் பலி; 12 பேர் படுகாயம்



(பக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தின் வடக்கு பகுதியில் அடுத்தடுத்து நடந்த இரட்டை குண்டுவெடிப்பில் 35 பேர் பலியாகினர். 12 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஈராக்கில் அரசு கட்டடங்கள், பொதுமக்கள் கூடும் முக்கிய பகுதிகள், மசூதிகளை குறிவைத்து பயங்கரவாதிகள் தற்கொலைப் படை தாக்குதல், கார் குண்டுத் தாக்குதலை நடத்திவருவது நடத்திவருவது தொடர்கதையாகி வருகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பக்தாத் நகரில் இரு பகுதிகளில் அடுத்தடுத்து இடம்பெற்ற இரட்டை குண்டுவெடிப்பில் 35 பேர் பலியாகினர்.

முதல் குண்டுவெடிப்பு பக்தாத்தின் ராத் அல் தமிமி நகரில் உள்ள தாஜின் நகராட்சி கட்டிடத்தில் ரிமோட் மூலம் இயக்கப்பட்ட கார் குண்டு தாக்குதல் நடந்தது.

அதே இடத்திற்கு அருகில் மற்றொரு குண்டு தாக்குதல் நடந்தது. இந்த இரட்டை குண்டுவெடிப்பில் 35 பேர் பலியானதாகவும் 12 பேர் காயமடைந்ததாகவும் அந்நாட்டு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# செங்கடலில் அகதிகள் படகு
# மூழ்கியதில் 197 பேர் பலி

சட்டத்துக்கு புறம்பாக சவுதி அரேபியாவில் குடியேற முயன்றதாக கூறப்படும் சுமார் 200 பேர் பயணம் செய்த விசைப்படகு ஒன்று செங்கடலில் விபத்துக்குள்ளாகி மூழ்கியதில் 197 பேர் பலியானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சூடானை ஒட்டியுள்ள செங்கடலில் சென்று கொண்டிருக்கும் போது நேற்றுமுன்தினம் இரவு படகில் திடீரென தீப்பற்றி இவ்விபத்து ஏற்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. விபத்துக்குள்ளான படகில் இருந்து 3 பேர் உயிருடன் மீட்கப்பட்டதாகவும் எவரேனும் உயிருடன் இருக்கின்றார்களா எனத்தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கியூபாவின் கொடி பறக்கவிடப்பட்டிருந்த அந்தப் படகின் உரிமையாளர்களான ஏமன் நாட்டைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். சோமாலியா, நைஜீரியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் இந்தப் படகில் பயணித்து சட்டத்துக்குப் புறம்பாக சவுதி அரேபியாவில் குடிபெயர முற்பட்டதாக கூறப்படுகின்றது. இதேபோல் 247பேரை ஏற்றிச் சென்ற மற்றொரு படகு, செங்கடல் பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# துனிசிய முன்னாள் ஜனாதிபதிக்கு மேலும் 15 ஆண்டுகள் சிறை

போதைப்பொருட்கள், ஆயுதங்கள் மற்றும் விலை உயர்ந்த கலைப் பொருட்களை நாடு கடத்திய குற்றச்சாட்டின் கீழ் துனிசியா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ஜைன் எல் அபைதின் பென் அலிக்கு அந்நாட்டு நீதிமன்றம் 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கியது.

துனிசியா நாட்டில் மக்கள் கிளர்ச்சியைத் தொடர்ந்து அந்நாட்டு ஜனாதிபதி ஜைன் எல் அபைதின் பென் அலி, மனைவி மற்றும் குழந்தைகளுடன் சவுதி அரேபியா நாட்டில் தஞ்சம் புகுந்தார்.

துனிசியா நாட்டின் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் கடந்த மாதம் 20ஆம் திகதி பென் அலி மற்றும் இவரது மனைவி லெய்லா டிரபெல்சிக்கு துனிசியா நீதிமன்றம் 35 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கியது.

இந்நிலையில் போதைப்பொருட்கள், ஆயுதங்கள் மற்றும் கலைப் பொருட்களைக் கடத்திய குற்றச்சாட்டின் கீழ் துனிசியா நாட்டு நீதிமன்றில் இடம்பெற்ற மற்றொரு வழக்கில் பென் அலிக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 33 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. நாட்டைவிட்டு குடும்பத்தினருடன் பென் அலி வெளியேறிய பின் துனிஸ் நகருக்கு வடக்கில் உள்ள அவரது அரண்மனை வீட்டில் போதைப் பொருட்கள் மற்றும் ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும் கிளர்ச்சியின் போது அப்பாவி மக்கள் 300பேரைக் கொன்றது உட்பட 182 வழக்குகள் பென் அலியின் மீது அந்நாட்டு நீதிமன்றில் நிலுவையில் உள்ளன. (ஸ்ரீ-2)




# விடாது துரத்தும் பாலியல் குற்றச்சாட்டு
# ஸ்ட்ராஸ் கான் மீது மற்றொரு பெண் புகார்

(பாரிஸ்)

சர்வதேச நாணய நிதியத்தின் முன்னாள் தலைவர் டொமினிக் ஸ்ட்ராஸ் கான் தன்னை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்ததாக பிரான்ஸ் எழுத்தாளர் டிரிஸ்டேன் பானன் பாரிஸ் நீதிமன்றில் வழக்கு தொடுத்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் டிரிஸ்டேன் பானன் (வயது 32). கடந்த 2003 ஆம் ஆண்டில், பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உள்ள ஸ்ட்ராஸ்கான் வீட்டிற்கு நேர்காணலுக்காக சென்ற போது, அவர் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டார் என்று ஏற்கனவே எழுத்தாளர் டிரிஸ்டேன் பானன் குற்றம் சாட்டியிருந்தார்.

இச்சம்பவத்தின் போது பொலிஸ் நிலையத்திற்கு செல்லவில்லை என்றும் 2007 ஆம் ஆண்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இதுபற்றி கூறியதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஸ்ட்ராஸ் கான் மீது பாரிஸ் நீதிமன்றத்தில் பானன் வழக்கு தொடுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், பாரிசில் தங்கியிருந்த ஸ்ட்ராஸ் கானிடம் நேர்காணலுக்கு சென்ற போது அவருடைய கையை பிடித்துக் கொண்டால் தான் பேசுவேன் என்று தெரிவித்தார். எனக்கு மன உளைச்சலை அளித்து வந்த இப்பிரச்சினைக்கு ஒருநாள் தீர்வு காண வேண்டும் என்று காத்திருந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன.

தற்போது நீதிமன்றில் வழக்கு தொடுப்பதற்கான காலம் வந்துவிட்டது. இச்சம்பவம் நடந்த போது வழக்கு தொடரலாம் என்று நினைத்தேன். ஆனால் அனைவரும் இந்த வழக்கில நியாயம் கிடைக்காது என்று கூறி விட்டனர் என்றார்.

சமீபத்திய நியூயோர்க் ஐந்து நட்சத்திர கோட்டல் பாலியல் பலாத்கார குற்றச்சாட்டில் இருந்து முழுவதுமாக விடுவிக்கப்படாத ஸ்ட்ராஸ் கானுக்கு இந்த வழக்கு மேலும் சங்கடத்தை அளித்துள்ளது. தற்போது நீதிமன்றத்துக்கு சென்றுள்ள எழுத்தாளர் டிரிஸ்டேன் பானன் ஸ்ட்ராஸ் கானின் இரண்டாவது மனைவி பிரிஜிட்டி கில்லேமெட்டினால் ஞானஸ்தானத்தின் போது வளர்ப்புக் குழந்தையாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



உலகிலேயே மிகப்பெரிய அகதிகள் முகாம் கென்யாவில் உள்ளது. 90 ஆயிரம் பேர் இதில் தங்கவைக்கக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. அதையும் மீறி அங்கு அகதிகள் குவிந்துள்ளனர். இதில் சோமாலிய நாட்டு அகதிகள் உணவுக்காக காத்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# கற்பழிப்பு கொலை வழக்கிலிருந்து தப்பிக்க முகமாற்று சத்திரசிகிச்சை
## ஜப்பான் இளைஞரின் தந்திரம்




(டோக்கியோ)

ஜப்பான் இச்சிகவா நகரைச் சேர்ந்த தத்சுயா இச்சிகாசி என்பவருக்கு இங்கிலாந்தைச் சேர்ந்த லிண்ட்சே ஆன் ஹாங்கர் (வயது 22) என்ற பெண் ஆங்கிலம் கற்றுக் கொடுத்தார். சம்பவத்தன்று இவர் தத்சுயா இச்சிகாசியின் அடுக்கு மாடி குடியிருப்பு வந்தார். ஆங்கிலம் கற்று கொடுத்த போது அவரை இச்சிகாசி கற்பழித்து கொலை செய்தார்.

பிணத்தை குளியல் அறையில் உள்ள ஒரு தொட்டியில் மறைத்து வைத்துவிட்டு தலைமறைவானார். இச்சம்பவம் கடந்த 2007ஆம் ஆண்டு இடம்பெற்றது. இதை தொடர்ந்து 2 ஆண்டுகளுக்கு பின்னர் இச்சிகாசி கைது செய்யப்பட்டார்.

அதற்கு முன்னதாக இந்த கொலை வழக்கில் இருந்து தப்பிக்க அவர் தனது முகத்தில் உதடு, மூக்கு உள்ளிட்ட பாகங்க ளில் மாற்றம் செய்து சத்திரசிகிச்சை செய்து கொண்டார். கைது செய்யப்பட்ட அவர் மீது டோக்கியோ நீதிமன்றில் வழக்கு தொடரபட்டபட்டுள்ளது. தற்போது வழக்கு விசாரணை நடந்து வருகிறது. விசாரணையின் போது தான் செய்த குற்றத்தை அவர் ஒப்புக் கொண்டார். (ஸ்ரீ-2)

# சர்வதேச நாணய நிதியத்தின் தலைவராக லகார்ட் பதவியேற்பு



வோஷிங்டனில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் முதல் பெண் தலைவராக பிரான்ஸ் நிதியமைச்சர் கிறிஸ்டன் லகார்ட் நேற்று முன்தினம் பதவியேற்றார்.

சர்வதேச நாணயநிதியத்தின் தலைவராக இருந்த ஸ்ட்ராஸ்கான் நியூயோர்க்கில் பாலியல் பலாத்கார குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டார். இதனால் பதவியை இராஜினாமாச் செய்தார். புதிய தலைவருக்கான தேர்தலில் பிரான்ஸ் நிதியமைச்சர் கிறிஸ்டன் லகார்ட்டுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், சீனா, இந்தியா,பிரேசில் ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

இதையடுத்து சர்வதேச நாணய நிதியத் தலைவராக 55 வயதான கிறிஸ்டன் லகார்ட் அதிகாரபூர்வமாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்நிலையில் அமெரிக்காவில் வோஷிங்டனில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடந்த விழாவில் கிறிஸ்டியன் லகார்ட் புதிய தலைவராகப் பதவியேற்றார். அவருக்கு அவ்வமைப்பின் தற்காலிக நிர்வாக இயக்குநர் ஜான் லிப்ஸ்கே பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். தொடர்ந்து இவர் ஐந்து ஆண்டுகள் பதவியில் நீடிப்பார். இவருக்குப் பல்வேறு சிறப்புச் சலுகைகள் உட்பட ஆண்டுக்கு 4 இலட்சத்து 6 ஆயிரத்து 940 டொலர் சம்பளமாகக் கிடைக்கும். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதியின் வாக்குறுதியின் படி நமது சம்பளம் மீள் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

ஜனாதிபதியின் வாக்குறுதியின் படி தமது சம்பளம் மீள்நிர்ணயம் செய்யப்படவேண்டும் என யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பத்திரிகையாளர் மாநாடு நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். கடந்த 2008ஆம் ஆண்டு ஜனாதிபதியால் உறுதியளிக்கப்பட்டபடி தமது சம்பளம் மீள்நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர். இவ்வாறான சம்பள உயர்வுகளை அரசாங்கம் கல்விச் சமூகத்திற்கு வழங்குவதனூடாகவே இந்நாட்டிலிருந்து புறப்பட்டுச் செல்லும் மூளைசாலிகள் வெளியேற்றத்தினைத் தடுக்க முடியும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இங்கு எமது கல்விச்சேவைக்கென அரசாங்கம் மொத்தத் தேசிய வருமானத்தில் 2.5 வீதத்தினையே செலவிடுகிறது. இவ்வீதத்தினை 6 வீதமாக அதிகரிக்கவேண்டும். அப்போதுதான் இலங்கையில் இலவசக் கல்வி என்ற கருத்து முழுமையடையும்.

அண்டைநாடான இந்தியாவில் கலாநிதிப் பட்டம் பெற்ற ஒருவருக்கு மாதாந்த வேதனம் ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படுகின்றது. பேராசிரியர் ஒருவருக்கு 2 இலட்சம் ரூபா வழங்கப்படுகிறது. இதைவிட 30வீத வீட்டுப்படி மற்றும் போக்குவரத்துப்படி ஆகியன வழங்கப்படுகின்றன.

ஆனால் இலங்கையின் பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு அடிப்படைச் சம்பளம் 26 ஆயிரத்து 900ரூபாவே வழங்கப்படுகிறது. ஆனால் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குக்கூட தற்போதைய வேதனம் 54 ஆயிரம் ரூபா எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறான குறைந்தளவு சம்பளத்தில் சேவை செய்வதற்கு யாருமே முன்வரமாட்டார்கள். இதனால் இவர்கள் வெளிநாடுகளில் பணிபுரியச் செல்கின்றனர் அல்லது பல்கலைக் கழகத்திற்கு வெளியே கவர்ச்சிகரமான சம்பளத்தைப் பெற்று சேவையாற்ற நினைக்கின்றனர்.

யுத்தம் காரணமாக பட்டப்படிப்பை முடித்தவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர் என எண்ணியபோதும் கற்றோரின் வெளியேற்றம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டப்படிப்பை முடித்த 550 இற்கு மேற்பட்ட பல்கலைக்கழக ஆசிரியர்கள் அண்மைக்காலத்தில் நாடு திரும்ப மறுத்துவிட்டனர் என உயர் கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான நிலைமைகளுக்கு காரணம் என்ன? இதனால்தான் நாம் வேதன உயர் வுகோரி பகிஷ்கரிப்பினைச் செய்து வருகின்றோம்.




இவ்வாறான நிலைமைகள் எமது பல்கலைக்கழ மாணவர்கள் தொடர்பில் மனவேதனையைத் தந்தாலும் அதிக சம்பளத்திற்காக வேறு நாடுகளுக்குப் பணிபுரியச் செல்லும் கற்றவர்களைத் தடுத்து நிறுத்தமுடியாது. இதனால் இலங்கையில் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவது தடைப்பட்டுவிடும்.

எமது நியாயமான கோரிக்கைகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திற்கு இடையில் நிறைவேற்றவேண்டும். அல்லது க.பொ.த(உ/த)பரீட்சையின் விடைத்தாள் மதிப்பிடும் பணியை நாம் பகிஷ்கரிப்போம் எனவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதற்குச்சரியானதீர்வு முன்வைக்கப்படாவிட்டால் நாட்டில் உள்ள பல்கலைக்கழகத்தில் போதிக்கக்கூடிய தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் வெளியேறுவதைத்தடுக்க முடியாததோடு இளைய தலைமுறையினை சுபீட்சமான எதிர்காலத்திற்கு பாதிப்பு ஏற்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஸ்ரீ-4)

## சிறையில் இருந்த கணவரை சூட்கேஸில் கடத்த முயன்ற பெண் கைது



சட்டவிரோத ஆயுதங்களை வைத்து இருந்ததாக ரமிரெஸ் ஜெரினா என்பவர் கடந்த 2007 ஆம் ஆண்டுமெக்சிகோவில் உள்ள செதுமாய் சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்கு 20 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு இருந்தது.

தனது வாழ்க்கைத் துணைவரை சிறையில் இருந்து காப்பாற்ற வேண்டும் என 19 வயது பெண் மரியா முயன்றார். அவர் பெரிய கறுப்பு நிற சூட்கேஸை மெச்சிகோ சிறைக்குள் கொண்டு சென்றார். பின்னர் அவர் வரும்போது ஒரு விதமான பதற்ற நிலையுடன் காணப்பட்டார்.

அவர் தடுமாற்றத்துடன் இருப்பதை பார்த்த சிறை பாதுகாப்பு நிர்வாகத்தினர் உஷார் அடைந்தனர். அவர்கள் உடனடியாக அந்த சூட்கேஸை சோதனை செய்தனர். அதை திறந்த போது சிறைக் கைதி ரமிரெஸ் இருப்பது தெரிய வந்தது.

சிறைக்காவலர்கள் அதிர்ச்சி அடைந்து கைதியை கடத்த முயன்ற பெண் மரியாவை கைது செய்தனர். அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிலுவையில் உள்ளன. சூட்கேஸில் கைதி தப்ப முயன்றதைத் தொடர்ந்து மெச்சிகோ சிறைகளில் உஷார் நிலை கடைப்பிடிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## பொதுச்சந்தை இன்மையால் மக்கள் பெரும் சிரமம்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் பிரதேசத்தில் பொதுச் சந்தை அமைக்கப்படாது மக்கள் தமது பொருட்களை கொள்வனவு செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின் றனர்.

கடந்த காலத்தில் மாங்குளம் நகரத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் ஒரு பொதுச் சந்தை அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இச் சந்தையானது கடந்த கால யுத்தத்தின் போது அழிவடைந்து இன்று பற்றைக் காடாகவுள்ளது.

தற்போது ஒலுவமடு, கரிப்பட்ட முறிப்பு, அம்பகாமம், கொல்லர் புளியங்குளம், கிழவன்குளம், பனிக்கன்குளம், நீதிபுரம், மாங்குளம் ஆகிய பிரதேசங்களில் மக்கள் மீள் குடி யேற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பொதுச் சந்தையொன்று இல்லாமையால் தனியார் வர்த்தக வியாபார நிலையங்களில் அதிக விலை கொடுத்து மரக்கறிகள், பழவகைகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்க்ள்ள வாங்க வேண்டியுள்ளது.

எனவே இதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இப்பிரதேசத்திற்கான ஒரு பொதுச் சந்தையினை அமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ஸ்ரீ-2-15)

### ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ் / ஸ்ரான்லி வீதி கிளைகளின் முக்கிய அறிவித்தல்

எமது அன்பான வாடிக்கையாளர்களே!

உங்களின் நலன்கருதி ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்/ஸ்ரான்லி வீதி கிளைகள் தங்களுடைய அடகுச் சேவையினை காலை 8.00 மணி முதல் 4.00 மணிவரை வார நாட்களில் நீடித்துள்ளமையை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

அத்துடன் ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணிவரை அடகுச்சேவை உட்பட விடுமுறை வங்கிச் சேவையினையும் யாழ்.கிளை நடாத்துகின்றது.

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

முகாமையாளர்,
ஹற்றன் நஷனல் வங்கி,
யாழ்.கிளை.

(சி-3665)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவசுப்பிரமணியம் கண்மணி



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், இல.1, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும், தற்போது கனடா டொரன்டோவில் வசித்தவருமாகிய திருமதி. சிவசுப்பிரமணியம் கண்மணி 05.07.2011 அன்று கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், பாலச்சந்திரன் (நியூயோர்க்), பாஸ்கரன், பாலேந்திரா (சிட்னி), பாலேஸ்வரி (கனடா), வைத்தியநாதன் (லண்டன்), விக்னேஸ்வரி (கனடா), வசந்தி (லண்டன்) கௌரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான, வைத்திலிங்கம், சண்முகம், மகேஸ்வரி, பூரணம், சரஸ்வதி, சிவப்பிரகாசம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற காந்தி மற்றும் விமலா, ஜெயந்தி, நாகேந்திரன், விஜயா, லக்ஷ்மணன், கிருஷ்ணதாசன், பரமராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும்,

அருண்-நித்தியா, சுகி-செல்வா, மதன்-டாரா, பைரவி, நாராயணி-ராகவன்-, பிரசாந்தினி, கார்த்திகா-கணேஷ், கவிதா-சுரேஸ், ஷணன்-டெபி, ஹரன்- ஹேமாலி, வித்தியா-செந்தூரன், வினோஷன், சபேஷன், துசி, ரகு, ஹரி- பூஜா, சிவா, தனுஜா-நந்தன், ஜெனனி (சிவில் பொறியியலாளர், கொழும்பு), ஜெனகா (மருத்துபீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பேர்த்தியாரும் ஹம்ஸா, புவன், மனுஷா, மேனகா, குமரன் பிரணவன், கிரன், கிருஷ்சாண், விஜய், ஹரி, அஜந்தன், பிரவின்ராஜா ஆகியோரின் பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2011) டொரன்டோவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மகள்-கௌரி,
மருமகன்- எஸ்.பரமராஜா (யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி)

(5302)

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்
-திருவள்ளுவர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஒலிம்பிக்கில் சாதனை படைத்து உலகிற்கு உதாரணமான துஷ்யந்தன்

கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் நடந்த விசேட தேவையுடையவர்களுக்கான ஒலிம்பிக் போட்டியில் யாழ்ப்பாணம் சிவபூமி பாடசாலையின் மாணவன் செல்வன் சிவராஜா துஷ்யந்தன் வெள்ளிப் பதக்கம் பெற்றுச் சாதனை படைத்த செய்தி தமிழ்கூறும் நல்லுலகைப் பெருமைப் படுத்தியுள்ளது.

மாற்றுவலுவுடைய மாணவன் துஷ்யந்தன் ஏதென்ஸ் நகரில் கால்பதித்து ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று வெள்ளிப்பதக்கத்தை பெற்றமை யாழ்ப்பாண மண்ணிற்கு மட்டுமன்றி இலங்கைத் தீவுக்கே பெருமை சேர்ப்பதாகும்.

மாணவன் துஷ்யந்தனின் இச்சாதனை சாதாரணமானதன்று.

பேசுகின்ற, கேட்கின்ற சக்தியை இழந்த துஷ்யந்தன் இச்சாதனையைப் படைப்பதற்கு பின்புலமாக பலர் இருந்துள்ளனர் என்பதை நினைக்கும் உயர்ந்த மானிடப் பண்பாட்டின் பெருமைக்கு நாங்களே சொந்தக்காரர்கள் என மார்தட்டிக் கூறவேண்டும் போல் உள்ளது.

ஒரு காலத்தில் வீடுகளுக்குள் முடங்கிக் கிடந்த இந்த மாணவர்களை வெளியில் கொண்டுவரும் மிகப்பெரும் தெய்வீகப் பணியை யாழ்ப்பாணத்து சிவபூமி அமைப்பினர் மேற்கொண்டிருந்தனர்.

சிவபூமி அமைப்பின் ஸ்தாபகர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அவர்களும் அவரோடு இணைந்து தர்மப் பணி செய்வோரும் எடுத்த முயற்சியின் பயனாக மாணவன் துஷ்யந்தன் கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் விளையாடி வெள்ளிப் பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

துஷ்யந்தனின் சாதனையில் சிவபூமி அமைப்பும், அவருக்கு பயிற்சி வழங்கிய சேவையாளர்கள் மற்றும் துஷ்யந்தன் சாதனை படைக்க யார்யாரெல்லாம் உதவி புரிந்தார்களோ அவர்கள் அத்தனைபேரும் இந்த வரலாற்று சாதனையின் பிரசவிப்புக்குச் சொந்தக்காரர்கள் என்பதில் மறுகருத்துக்கிடமில்லை.

அதேவேளை துஷ்யந்தன் படைத்த இந்த உலக சாதனை ஒரு செய்தியைக் கூறி நிற்கின்றது.

ஆம்! அன்புக்குரியவர்களே! எந்தப் பிள்ளையையும் இவரால் எதுவும் முடியாது என்று நினைத்து விடாதீர்கள். எதுவும் முடியாது என்று நீங்கள் நினைக்கக்கூடியவர்களாலும் உலக சாதனை படைக்க முடியும் என்பதே அந்தச் செய்தியாகும்.

ஆகையால் மாற்றுவலுவுடையவர்களை வீட்டுக்குள் பூட்டி வைக்கும் அறியாமையை உடைத்தெறிய துஷ்யந்தனின் சாதனையை உலகம் உதாரணமாக்கிக் கொள்ளலாம்.

# அல்லல் போக்கும் ஆடவல்லான் சிதம்பர நடராசனின் ஆனி உத்தர வழிபாடு



இறைவன் தமது ஆன்மாக்களின் பொருட்டுப் பஞ்சகிருத்தியங்களையும் செய்கின்றார். பஞ்சகிருத்திய நடனம் தான் சிவனின் திருவிளையாடலான தில்லையில் ஆடும் திருத்தாண்டவம் ஆகும். சிதம்பரத்திலே திருநடம் புரியும் நடராசாப் பெருமானை வழிபடுவது பேரின்பப் பேறாகும்.

தில்லை நடராசாப் பெருமானின் திருநடனம் கண்டு இன்புற்ற அப்பர் சுவாமிகள் மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே எனவும் ஆடும் போது **உன்னடியின் கீழ் இருக்க வேண்டும்** எனக் காரைக்காலம்மையாரும் கூறியிருப்பது ஆனி உத்தர சிதம்பரதரிசனம் எத்துணை சிறப்பானதென்பதை அறியமுடிகின்றது.

மேலும் நடராசப் பெருமானின் திருநடனத்தை, ஆனந்தத் தாண்டவத்தை முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தொறாயிரம் ரிஷிகளும் கண்டுதரிசிப்பதற்கு ஆனி உத்தர நன்நாளை தேர்ந்தெடுத்தமை தனிச்சிறப்பாகும். தில்லை நடராசப் பெருமானின் திருநடனத்தைக் கண்டு களிப்போர் பக்தி பரவசமாகி,

நடராசர் பாட்டே நறும்பாட்டு, ஞானத்தார் பாடடெல்லாம் கவரும் பாட்டு, சிதம்பரப்பாட்டே அருட்பாட்டு, ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு, அம்பலப்பாட்டே அருட்பாட்டு அல்லாத பாட்டெல்லாம் வெறும் பாட்டு எனப்பாடி ஆடி வழிபடுவதையும்,

நடராசாப் பெருமான் மேல் பக்தி பூண்ட அருளாளர் ஒருவர் சிதம்பரம் போகாமல் இருப்பேனோ? தில்லை நடராசனைக். காணாமல் இருப்பேனோ? எனப்பக்தி பூண்டு பாடுவதையும் எண்ணும் போது அடியார்களின் அல்லல் போக்கும் சிதம்பர நடராசனின் தரிசனம் எத்துணை சிறப்பானதென்பது உணர முடிகின்றது.

வருடம்தோறும் வரும் ஆனி உத்தர நன்நாள் தில்லை நடராசப் பெருமானின் திருத்தாண்டவத்தைக் கண்டு போற்றிவழிபடும் அடியார்களின் அல்லல் நீங்கி நல்லருள் கிடைக்கும் என்பதை,

**தில்லையம்பல நடராசா**
**செழுமை நாதனே பரமேஸ்வரா!**
**அல்லல் தீர்த்தாட வா! வா! வா!**
**அசைந்தாட வா! வா!**

எனும் இனிமையான பாடல் வரிகளும் எடுத்துக் காட்டுகின்றன.

எனவே, ஆனி உத்தர நன்நாளிலே நாமும் தில்லைக்காட்சிபோல் வேறில்லை காட்சி. தொல்லைகள் நீங்கி நன்மைகள் பெறுவோம் என மனத்திலே உறுதி கொண்டு வழிபாடுகள் செய்து நலம் பல பெறுவோம்.

-நீர்வைமணி

# ஆதிவாசிகள் தின நிகழ்வில் பங்கேற்க ஜனாதிபதிக்கு அழைப்பு

(கொழும்பு)

சர்வதேச ஆதிவாசிகள் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 30, 31ஆம் திகதிகளில் இடம்பெறும் நிகழ்வுகளில் பங்கேற்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆதிவாசிகளின் தலைவர் ஓரிவரிகே வன்நில அத்தோ நேற்று முன்தினம் கண்டி ஜனாதிபதி மாளிகைக்கு அழைப்பினை விடுப்பதற்காக விஜயம் செய்திருந்தார்.

நாடு முழுவதிலுமுள்ள ஆதிவாசிகள் இந்த நிகழ்வுகளுக்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள்.

ஆதிவாசிகளின் தனித்துவத்தை உறுதிப்படுத்துமாறு ஆதிவாசிகளின் தலைவர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

ஆதிவாசிகள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

வேடுவ மக்களின் நலனுக்காக தாம் 500 மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளதாக ஜனாதிபதி இதன்போது கூறினார். இந்த நிதி பயன்படுத்தப்பட்ட விதம் தொடர்பாக உரிய அமைச்சர்களிடம் கேட்டறிந்த ஜனாதிபதி ஆதிவாசிகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு 2 மாதங்களுக்குள் அவற்றுக்குத் தீர்வு வழங்குமாறும் பணிப்புரை விடுத்தார். (ஸ்ரீ-2)

# வெள்ளைக்கொடி விவகார வழக்கு விசாரணை முடிவு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக் கொடி விவாகார வழக்கின் விசாரணைகள் நேற்று முன்தினம் முடிவுக்கு வந்துள்ளது.

அதேவேளை சாட்சியப் பதிவுகள் குறித்து திருத்தங்களுக்காக நீதிமன்றம் எதிர்வரும் 25-ம் திகதி கூடவுள்ளது.

வன்னியில் இம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது வெள்ளைக் கொடிகளுடன் படைத்தரப்பினரிடம் சரணடையச் சென்ற விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்களைச் சுட்டுக் கொல்லுமாறு படைத்துறைச் செயலாளர் உத்தரவு பிறப்பித்ததாக சண்டே லீடர் பத்திரிகைக்கு சரத் பொன்சேகா அளித்திருந்த பேட்டிக்கு ஆட்சேபனை தெரிவித்து அவருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

மேல் நீதிமன்ற நீதிபதிகளான திபாலி விஜசுந்தர, டபிள்யூ.எம்.பீ.பி. வராவெல, சுர்பிக் ரஸீன் ஆகியோரடங்கிய ட்ரயல் அட்பார் விசாரணை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமையுடன் முடிபுக்கு வந்தது.

இவ் விசாரணையின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவும் பல்கலைக்கழக ஆங்கில பேராசிரியர் ஆஷ்லி ஹல்வே ஆகியோர் பிரதிவாதி தரப்பின் சாட்சியமாக சாட்சியமளித்தனர். இச்சாட்சிகளை பிரதிவாதி தரப்பு சட்டத்தரணி நளீன் லத்துவ ஹெட்டியும் பிரதி சொலிசிற்றர் ஜெனரல் புவனெக அலுவிகாரவும் குறுக்கு விசாரணை செய்தனர்.

அவர்கள் சாட்சியமளித்து முடிந்த பின்னர் பிரதிவாதியின் சட்டத்தரணி தமது பக்கசாட்சியங்கள் அனைத்தும் முடிபடைந்து விட்டதாகவும் மற்றொரு சாட்சியான சண்டே லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளரான ரைசா விக்கிர மதுங்கவின் சாட்சியம் தேவைப்படவில்லை எனவும் நீதிமன்றத்துக்கு தெரிவித்தார்.

இதனை அடுத்து முதற்கட்ட விசாரணை முடிவுற்ற நிலையில் இரு தரப்பினருடனும் ஆலோசனை நடத்திய நீதிபதிகள் சாட்சியப் பதிவுகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக வழக்கை இம்மாதம் 25 ம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிவரை ஒத்திவைத்தனர். (எ-8)

# சத்திய தரிசனம்



## அனைவரையும் நேசியுங்கள்

சொர்க்கத்தை தேடிப் போக வேண்டியதில்லை, கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம் பிறரிடம் காட்டும் அன்பு, உதவ முடியாத ஜீவன்களிடம் காட்டும் இரக்கம் இவற்றால் நம்முடைய மனத்துக்கு கிடைக்கும் மனநிறைவே சொர்க்கம்.

அன்பை அடிப்படையாகக் கொண்டு அனைவரையும் நேசித்து ஒற்றுமையுடன் வாழ வேண்டும்.


இதயமாகிய வயலில் அன்பு என்ற நாற்றைநட்டுவெறுப்பு என்றகளையை நீக்கி தொண்டு என்னும் நீரைப் பாய்ச்சினால் இன்பம் என்னும் விளைச்சலைக் காணலாம்.

பொறுமை, மன்னிக்கும் மனப்பான்மை, கட்டுப்பாடு, திருடாமை, தூய்மை, புலன்களின் மேல் ஆதிக்கம், திறமை, அறிவு, உண்மை, கோபமின்மை இந்தப் பத்தும் தர்மத்தின் குணநலன்களாகும்.

கண்கள் இரண்டானாலும் பார்க்கும் தொழிலை மட்டும் செய்கிறது. காதுகள் இரண்டாயினும் கேட்கும் தொழிலை மட்டும் செய்கிறது. வாய் ஒன்றாக இருந்தாலும் சாப்பிடுவது, பேசுவது ஆகிய இரு தொழில்களை செய்கிறது. நல்வாழ்க்கைக்கு அதை அடக்கி வைக்க வேண்டும்.

# பத்மநாபசுவாமி கோயிலின் பாதாள அறைகளில் பொக்கிஷங்களை மீட்கும் பணி தொடர்கிறது

## உச்ச நீதிமன்றம் புதிய கட்டுப்பாடு



கேரளாவின் பத்மநாப சுவாமி கோயிலின் பாதாள அறைகளில் உள்ள ஆபரணப் பொக்கிஷங்களை மீட்டு ஆராயும் பணிகள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் நேற்று புதிய கட்டுப்பாடுகளை விதித்தது.

அதன்படி கோயிலின் பாதாள அறைகளில் நுழைந்து தங்க, வைர நகைகள், விக்கிரங்கள், நவரத்தின கற்கள் என அனைத்தையும் கண்டெடுப்பது, அவற்றை கணக்கெடுப்பது உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் வீடியோ மற்றும் புகைப்படங்கள் மூலம் பதிவு செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் பணியை மேற்கொண்டு வரும் ஓய்வுபெற்ற நீதிபதிகள் உள்ளிட்ட 7 பேர் அடங்கிய குழுவில் எவரும் ஊடகங்களுக்கு எவ்வித தகவலையும்அளிக்கக்கூடாதுஎன்றும்உச்ச நீதிமன்றம் கட்டுப்பாடு விதித்தது. முன்னதாக கோயிலில் கண்டெடுக்கப்பட்ட நகைகள் அனைத்தும் திருவாங்கூர் அரச பரம்பரைக்கே சொந்தமானது என அக்குழுவில் ஒருவர் கூறியதாக தகவல் வெளியானது கவனத்திற்குரியது.

முன்னதாக உச்சநீதிமன்ற உத்தரவுப்படி ஓய்வுபெற்ற நீதிபதிகள் உள்ளிட்ட 7பேர் அடங்கிய குழுவின் முன்னிலையில் பத்மநாப சுவாமி கோயிலில் உள்ள பாதாள அறைகள் திறக்கப்பட்டு அங்குள்ள பொருட்க ளைக் கணக்கெடுக்கும் பணிகள் கடந்த 27 ஆம் திகதி தொடங்கியது.

பாதாள அறைகளிலிருந்து தங்க,வைர நகைகள்,நவரத்தினங்கள் பதித்த ஆபரணங்கள் ,விக்கிரங்கள் கிடைத்துள்ளன. இந்தப் பொக்கிஷக் குவியலின் மதிப்பு ஒரு இலட்சம் கோடியாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

இன்னும் பி என குறிக்கப்பட்ட பாதாள அறையை திறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இரும்பினாலான கதவை திறந்த பின்னர் அடுத்து இருந்த மரத்திலான பிரமாண்ட கதவும் திறக்கப்பட்டது. அதையடுத்து மீண்டும் ஒரு இரும்பு கதவுள்ளது.

அந்தக் கதவைத் திறப்பதுதான் சவாலாக உள்ளது. அதை திறக்க நிபுணர்கள் வரவழைக்கப்படவுள்ளனர். இன்னும் சில நாட்களுக்குள் இந்தக் கதவு திறக்கப்படும் எனத் தெரிகிறது.

பாதாள அறைகளில் உள்ள பொருட்களை பட்டியலிடும் பணி நிறைவடைந்த பின் அது குறித்த அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# தயாநிதிமாறனை நீக்க இதுவே சரியான தருணம்

## ஜெயலலிதா தெரிவிப்பு

(புதுடில்லி)

மத்திய அமைச்சர் தயாநிதி மாறனை அமைச்சரவையிலிருந்து நீக்க பிரதமருக்குச் சரியான நேரம் வந்துள்ளதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு முறைகேடு தொடர்பாக விசாரணை நடத்திவரும் சி.பி.ஐ. விசாரணையின் தற்போதைய நிலைமை குறித்து உச்ச நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்தது.

அதில் 2ஜி முறைகேடு வழக்கில் மத்திய அமைச்சர் தயாநிதியிடம் விசாரணை நடத்தவுள்ளதாக உச்ச நீதிமன்றில் சி.பி.ஐ. தெரிவித்துள்ளது.

மேலும் இவ்விவகாரம் தொடர்பாக 2001-2008 ஆண்டு வரையுள்ள காலகட்டத்திற்கான விசாரணையை நடத்தி முடிக்க 3 மாதகால அவகாசம் கோரியுள்ளனர்.

இந்நிலையில் நடப்பு நிதி ஆண்டுக்கான திட்டக்குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ள முதலமைச்சர் ஜெயல லிதா டில்லி சென்றுள்ளார். (ஸ்ரீ-2)

# கனிமொழியை சந்தித்தார் அழகிரி



அலைக்கற்றை முறைகேடு தொடர்பான வழக்கில் கைதாகி திஹார் சிறையிலுள்ள மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியை மத்திய அமைச்சரும் அவரது சகோதரருமான மு.க. அழகிரி கடந்த திங்கட்கிழமை சந்தித்துள்ளார்.

அவருடன் தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி,திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் பெரிய கருப்பன் ஆகியோரும் கனிமொழியைச் சந்தித்தனர்.

கனிமொழியைச் சந்திப்பதற்காக தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்ச்செல்வம் ஆகியோரும் நேற்று முன்தினம் டில்லி வந்துள்ளனர். அவர்கள் கனிமொழியை நீதிமன்றத்திலோ திஹார் சிறையிலோ நேற்று சந்தித்திருக்கக்கூடும் என்று தெரிகிறது.அலைக்கற்றை வழக்கை விசாரித்து வரும் சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றம் கோடைகால விடுமுறை முடிந்து கடந்த 4ஆம் திகதி மத்திய தொலைத் தொடர்புத் துறை முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, கனிமொழி, கலைஞர் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் சரத்குமார், ஸ்வான் டெலிகொம் நிறுவன மேம்பாட்டாளர் ஷாஹித் உஸ்மான் பல்வா உள்ளிட்ட 14 பேர் கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய இரு நாட்களும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஓ.பி.சைனி முன்பு ஆஜர்படுத்தப்பட்டனர்.

கனிமொழிக்கு ஆதரவாக அவரது கணவர் அரவிந்தன், தி.மு.க மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள் கடந்த இரண்டு வாரங்களாக நீதிமன்றத்துக்கு வந்த வண்ணம் உள்ளனர். (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

# பாராளுமன்றத்தில் தயாநிதிமாறன் பதவிவிலக வற்புறுத்துவோம்

## பாரதிய ஜனதா அறிவிப்பு

2ஜிஅலைக்கற்றை முறைகேடு தொடர்பான மத்திய ஜவுளித்துறை மந்திரி தயாநிதி மாறன் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. தயாநிதி மாறன் தொலைத் தொடர்பு மந்திரியாக இருந்த போது பி.எல்.என்.எல். தொலைபேசி இணைப்புக்களை தவறாக பயன்படுத்தினார். தனியார் செல் நிறுவனத்துக்கு சாதகமாக செயல்பட்டார் என்று எதிர்க்கட்சிகள் குற்றச் சாட்டுக்களை கூறி உள்ளன.

தயாநிதி மாறனும் 2 ஜி அலைவரிசை முறைகேட்டில் ஈடுபட்டார். அதன்மூலம் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே அவர் பதவி விலக வேண்டும் என்று பல்வேறு கட்சி தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அவராகவே விலகாவிட்டால் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. தயாநிதி மாறன் மீதுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக பல்வேறு ஆதாரங்களை சேகரித்து வைத்து இருப்பதாக பாரதீய ஜனதா மூத்த தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

பாராளுமன்ற மழை கால கூட்டத் தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி தொடங்குகிறது. அப்போது மத்திய மந்திரி தயாநிதி மாறன் பதவி விலக வேண்டும் என்பதை தீவிரமாக வற்புறுத்த பாரதீய ஜனதா முடிவு செய்துள்ளதாக டில்லி வட்டாரங்கள் கூறுகின்றன.

அலைக்கற்றை முறைகேடு விவகாரத்தில் தயாநிதி மாறனை எந்த அரசியல் கட்சியாலும் காப்பாற்ற முடியாது. இந்த விடயத்தில் அவரக்கு எதிராக தேவையான ஆவணங்கள் அனைத்தும் உள்ளன.

எனவே அவர் பதவி விலக கோரி நெருக்கடி கொடுப்போம். பதவி விலகுவதை தவிர அவருக்கு வேறு வழி இல்லை என்று பா.ஜனதா மூத்த தலைவர் ஒருவர் கூறினார்.

பா.ஜனதாவுடன் மற்ற எதிர்க்கட்சிகளும் இணைந்து இந்த பிரச்சினையை எழுப்ப திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. எனவே குளிர்கால கூட்டத் தொடரில் தயாநிதி மாறன் பதவி விலகும் விவகாரம் பரப்பை ஏற்படுத்தும் என்று டில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீ-2)

# தெலுங்கானாவில் 2 நாளாகவும் முழு அடைப்பு போராட்டம்

# இயல்பு வாழ்க்கை பாதிப்பு

தனி மாநில கோரிக்கையை வலியுறுத்தி தெலுங்கானா அரசியல் கூட்டு நடவடிக்கைக் குழுவால் மேற்கொள்ளப்பட்டுள்ள முழு அடைப்பு போராட்டத்தில் ஆந்திராவின் தெலுங்கானா பகுதிகளில் இரண்டாம் நாளாக நேற்றும் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டது.

ஐதராபாத் உள்ளிட்ட தெலுங்கானா மாவட் டங்கள் அனைத்திலும் பாடசாலைகள், கல்லூரிகள், கடைகள், எரிபொருள் நிலையங்கள் மற்றும் இதர வர்த்தக நிறுவனங்கள் மூடிப்பட்டிருந்தன. ஆந்திர அரசு போக்குவரத்தும் இயக்கப்படாத்தால் பயணிகள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகினர்.

அரசு அலுவலகங்கள் திறந்திருந்தாலும் அலுவலர்கள் வராததால் பல இடங்களிலும் வெறிச்சோடி கிடந்தன.


இந்த 48 மணிநேர அடைப்பு போராட்டத்தின் முதல் நாளான செவ்வாய்க்கிழமை உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்ட நிலையில், அம்மாணவர்கள் பேரணி நடத்த முடிபு செய்துள்ளனர்.

இதன் காரணமாக உஸ்மானியா பல்கலைக்கழகப் பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது.


தெலுங்கானா ராஷ்டீரிய சமிதி கட்சி தொண்டர்கள் பல்வேறு இடங்களில் போராட்டப் பேரணி நடத்தி வருகின்றனர்.


தெலுங்கானா விவகாரத்தில் கவனம் செலுத்தி உடனடி தீர்வை வலியுறுத்தும் இந்த 48 மணி நேர முழு அடைப்பு போராட்டத்தின் தொடர்ச்சியாக ஜுலை 8,9 ஆம் திகதிகள் புகையிரத மறியல் போராட்டத்தில் ஈடுபட கூட்டு நடவடிக்கைக் குழு தீர்மானித்துள்ளது.

மேலும் இந்த விவகாரத்தையொட்டி பதவி விலகிய பல்வேறு கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 100ஐ தொட்டுள்ளது. (ஸ்ரீ-2)






திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவிலுக்கு கேரள அறநிலையத்துறை அமைச்சர் சிவகுமார் (நடுவில்) தலைமையிலான உயர் அதிகாரிகள் நேற்று முன்தினம் சென்றதைப் படத்தில் காணலாம்.














ஏதென்ஸ் நகரில் நடந்த சர்வதேச ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்று சாதனை படைத்த யாழ்ப்பாணம் சிவபூமி மாணவன் செல்வன் சிவராசா துஷ்யந்தனின் பாராட்டு விழா நேற்று கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சாதனையாளர் துஷ்யந்தன் அழைத்துவரப்படுவதனையும் பேராசிரியர்கள் மற்றும் இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் ஆகியோர் பாராட்டுரை வழங்குவதனையும் படங்களில் காணலாம்.

# அரசியல் கிரிக்கெட் அணிக்குள் பரவி பிளவை ஏற்படுத்தியது - சங்கக்கார

1996 ஆம் ஆண்டின் உலகக் கிண்ண வெற்றியுடன் இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கும் நிர்வாகத்திற்கும் பணமும் அதிகாரமும் வந்தன. அணியிலுள்ள வீரர்கள் சபையின் அதிகாரப் போட்டியில் சம்பந்தப்பட்டனர். பல சந்தர்ப்பங்களில் சபையின் அரசியலானது அணிக்குள்ளும் பரவி பிளவையும் தப்பபிப்பிராயங்களையும் அவநம்பிக்கையும் ஏற்படுத்தியது என இலங்கை கிரிக்கெட் அணி வீரர் குமார் சங்கக்கார குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்துடன் அனைத்து நாடுகளிலும் தேசிய கிரிக்கெட் சபைகளுக்கான நிர்வாகிகள் அரசியல் தலையீடு இன்றி தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற சர்வதேச கிரிக்கெட் சபையின் பணிப்புரையை இலங்கை அணியின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான குமார் சங்கக்கார வரவேற்றுள்ளார். நிதி முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் காரணமாக சிறிலங்கா கிரிக்கெட்டின் இடைக்கால நிர்வாக குழு உறுப்பினர்கள் ராஜினாமா செய்ய நிர்ப்பந்தித்ததாக விளையாட்டுத் துறை அமைச்சர் அறிவித்து சில நாட்களில் சங்கக்காரவின் கருத்து வெளிவந்துள்ளது.

லோர்ட்ஸ் அரங்கில் கடந்த திங்கட்கிழமை தான் நிகழ்த்திய எம்.சி.சி. கொலின் கௌட்ரி ஞாபகார்த்த சொற்பொழிவில் மேற்படி கருத்தை சங்கக்கார தெரிவித்தார்.

கடந்த பல வருடங்களாக அணியினரால் உயர்ந்த மதிப்பளித்து போற்றப்படும் ஐக்கியம், வெளிப்படைத்தன்மை, அர்ப்பணிப்பு ஒழுக்கம் ஆகிய பண்புகளை நிர்வாகிகளும் கடைப்பிடிக்க வேண்டும் என குமார் சங்கக்கார கூறினார்.

இங்கிலாந்துடனான 3ஆவது ஒருநாள் சர்வதேச போட்டியில் 6 விக்கெட்டுகளால் இலங்கை அணி வெற்றி பெற்ற மறுநாள் சங்கக்கார இந்த உரையை நிகழ்த்தினார். இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் கொலின் கௌட்ரியின் ஞாபகார்த்தமாக 2001ஆம் ஆண்டு முதல் இந்த சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டு வருகிறது.

போட்டிகளில் விளையாடும் காலத்தில் இச்சொற்பொழிவை நிகழ்த்திய முதலாவது வீரர் குமார் சங்கக்கார என்பதுடன் இச்சொற்பொழிவை நிகழ்த்திய ஒரேயொரு இலங்கை வீரரும் அவராவார்.


நிர்வாகத்தில் மேலும் தொழில்சார் தன்மையும் முன்னோக்கிய சிந்தனையும் வெளிப்படைத் தன்மையும் இல்லாவிட்டால் பொதுமக்களின் ஆதரவை நாம் இழக்கும் அச்சுறுத்தல் ஏற்படும். உண்மையில் இது ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கிறது. விசுவாசமான ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்து வருவது அதிகரிக்கின்றது. அவர்களின் ஆர்வம்தான் கிரிக்கெட்டுக்கு சக்தி அளிக்கின்றது. அவர்கள் கிரிக்கெட்டிலிருந்து வேறுபுறம் திரும்பினால் முழு முறைமையுமே சீர்குலைந்துவிடும் என சங்கக்கார கூறியுள்ளார்.

அரசியல் தலையீடுகள், ஊழல் குற்றச்சாட்டுகள், தவறான நிர்வாகம் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகும் அங்கத்துவ நாடுகளின் சபைகளை இடைநிறுத்துவது என்ற ஐ.சி.சியின் நிலைப்பாடு இதற்கு தீர்வாக அமையலாம். இது அணிகளைக் களமிறக்கும் மற்றும் ஐ.சி.சியிடமிருந்து நிதி மற்றும் ஏனைய உதவிகளை பெறும் ஆற்றலை இல்லாமல் ஆக்கக்கூடும். எனினும் ஓர் இலங்கையர் என்ற வகையில் நாமே தீர்வுகளை தேடிக்கொள்ளும் நம்பிக்கையை கொண்டிருக்கின்றேன் என குமார் சங்கக்கார தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்றமை நாட்டின் ஐக்கியத்திற்கான மிகப் பெரிய தருணம். அதேவேளை நாட்டின் கிரிக்கெட் நிர்வாகம் ஒரு தொண்டரினால் தலைமை தாங்கப்படும், மேன்மையான நோக்கம் கொண்ட மனிதர்களால் நடத்தப்படும் நிறுவனம் என்ற நிலையிலிருந்து பல மில்லியன் டொலர் நிறுவனமொன்றாக மாற்றமடைந்தது. அப்போதிருந்தே அது கொந்தளிப்பான நிலையிலுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். 1996ஆம் ஆண்டின் வெற்றியுடன் வீரர்களுக்கும் நிர்வாகத்திற்கும் பணமும் அதிகாரமும் வந்தன. அணியிலுள்ள வீரர்கள் சபையின் அதிகாரப்போட்டியில் சம்பந்தப்பட்டுள்ளனர். இந்த வழியில் தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள் வீரர்களின் விசுவாசத்தை தமது சொந்த இலக்குகளை அடைவதற்காக பயன்படுத்திக்கொண்டனர்.பல சந்தர்ப்பங்களில் சபையின் அரசியலானது அணிக்குள்ளும் பரவி பிளவையும் தப்பபிப்பிராயங்களையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியது என கூறியுள்ளார்.




# சங்கக்காரவின் உரை குறித்து விசாரணை நடத்த உத்தரவு



இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்திலுள்ள அரசியல் தலையீடுகள், ஊழல்கள் குறித்து விமர்சித்த இலங்கை அணி வீரர் குமார் சங்கக்கார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்.

குமார் சங்கக்கார கடந்த திங்கட்கிழமை லண்டன் லோட்ஸில் நிகழ்த்திய எம்.சி.சி. கொலின் கௌட்ரி ஞாபகார்த்த சொற்பொழிவில் இவ்விமர்சனங்களைத் தெரிவித்திருந்தார். வெளிப்படையான அந்த உரையின் பின் குமார் சங்கக்காரவை அரங்கிலிருந்தவர்கள் எழுந்து நின்று பாராட்டிக் கௌரவித்தனர். எனினும் இலங்கையில் அந்த உரை சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

சங்கக்காரவின் உரை குறித்து விசாரணை நடத்தி விளக்கமளிக்குமாறு சிறிலங்கா கிரிக்கெட்டிற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே உத்தரவிட்டுள்ளார். சங்கக்காரவின் உரை குறித்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து விளக்கமளிக்குமாறு சங்கக்கார கோரப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனம் மீதான நிதி முறைகேடுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களையடுத்து அதன் இடைக்கால நிர்வாகக் குழுவைக் கலைத்த சில நாட்களிலேயே முன்னாள் அணித்தலைவரான குமார் சங்கக்கார இந்தச் சொற்பொழிவை நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒரு வீரர். சிறிலங்கா கிரிக்கெட்டுடன் அவர் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளார். இது போன்ற கருத்தை அவர் வெளியிட முடியாது என அமைச்சர் அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அவர் அனுமதி பெற்றிருக்க வேண்டும். கிரிக்கெட் நிர்வாகம் குறித்தோ, கிரிக்கெட் குறித்தோ அவர் பேச முடியாது. தன்னைப் பற்றி எதுவும் பேசலாம். இது குறித்து உடனடியாக அறிக்கை ஒன்றை எனக்குச் சமர்ப்பிக்குமாறு கிரிக்கெட் சபைத் தலைவருக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன் என அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

# இராணுவம் தடையாக இருந்...

நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது தேர்தல் காலமாகும். இதனால் தென்னிலங்கையில் இருந்து வருகைதந்த அமைச்சர்களில் சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிக்குரிய கட்சி என்கின்றனர்.

புலிகள் சொன்னவற்றை அவர்கள் செய்கிறவர்கள் எனக் குற்றம்சாட்டி வாக்குக் கேட்கின்றனர். நாம் புலிகள் என்றால் நீங்கள் கைது செய்துவைத்துள்ள கே.பியை எவ்வாறு கூறுவீர்கள்?

நாம் முதல்தடவையாக உள்ளூராட்சித் தேர்தலுக்காக நடத்திய பிரசாரக் கூட்டத்தையே இராணுவத்தினர் தமது அடாவடித்தனத்தின் மூலம் நிர்மூலமாக்கினர்.

இதனை அங்கு நின்ற பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் இடையேயான மோதல் என்றும் வர்ணிக்கின்றனர். எமதுபாதுகாப்புக்குதரப்பட்ட பொலிஸாரோடு தகராறு என்றால் அது யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுத்தே தீரவேண்டும்.

தாக்குதல் நடத்தியவர்களை நாம் அடையாளம் காட்டுகின்றோம் எனக் கூறியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை.

தேர்தல் காலங்களில் சுதந்திரமாக பிரசாரம் செய்ய இராணுவம் வழி செய்ய வேண்டும். அதை விடுத்து அச்சுறுத்தும் வகையில், செயற்படுத்துவதானது ஜனநாயக முறையிலான தேர்தல் என்று சொல்லிவிட முடியாது.

இங்கு எந்த நிகழ்விற்கும் இராணுவத்தின் பிரசன்னம் இருக்கினறது. இது வன்முறையாகும். உலகத்தின் பார்வையிலிருந்து தம்மை காப்பாற்றிக் கொள்ள அரசாங்கத்துக்கு தமிழ் மக்களின் வாக்கு தேவைப்படுகின்றது.

யாரும் யாருக்கும் வாக்களிக்கலாம். அதற்காக அச்சுறுத்தி வாக்குப் பலத்தை அதிகரிப்பது ஜனநாயகத்துக்கு விரோதமாகும்.

தேர்தல் காலங்களில் அரச பிரசாரங்களுக்காக அரச வாகனங்கள் ஊழியர்களைப் பயன்படுத்துகின்றனர்.

இது கண்டிக்கத்தக்கது. முற்று முழுதாக இராணுவப்பிரசன்னம் இல்லாத போதுதான் ஜனநாயக வழியிலான தேர்தல் நடைபெறும். இவற்றுக்கு பொலிஸாரை நியமிப்பதே நன்மையாக அமையும்.

உலக நாடுகளில் ஜனநாயக முறையிலான தேர்தல் நடைபெறும்போது பொலிஸாரின் பிரசன்னமே இருக்கும். ஆனால் இங்கு அவ்வாறு இல்லை.

கடந்த காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட ஐ.நா அறிக்கையை நாமே முதலில் வரவேற்றிருந்தோம். அங்கு நாம் வாசித்ததை தற்போது கொலைக்களம் படமாகவும் காண்பிக்கின்றனர்.

யுத்தகாலத்தில் நாம் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையே ஐநா அறிக்கையின் சாராம்சமாக இருக்கின்றது என்பதனை நாம் தெளிவாக கூறிவருகின்றோம்.

வன்னி யுத்தத்தில் மக்கள் கொல்லப்படவில்லை எனக் கூறி வரும் அமைச்சர்களும் நல்லூர் எவ்விடத்தில் இருக்கிறது என்பது கூட தெரியாத அமைச்சர்களும் இன்று மக்களின் வாக்குகளை அறுவடை செய்ய பயணித்திருப்பது வேடிக்கையானதே.

ஜனநாயக முறையிலாக தேர்தலுக்கு இராணுவத்தினர் தடையாக இருப்பார்களாயின் ஜனநாயக வழியில் போராட நாம் தயாராக இருக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-4)




# தமிழ்ப் பேரறிஞர்...

தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றிய பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் இறுதிவரை தமிழியல் ஆய்வுக்காகத் தன்னை அர்ப்பணித்திருந்தார்.

தமிழ்நாட்டில் நடந்த செம்மொழி மாநாட்டில் ஆய்வரங்கின் தலைமைப் பதவி பேராசிரியர் சிவத்தம்பிக்கு வழங்கப்பட்டிருந்தமை அவரின் தமிழ் அறிவுக்கு சான்று பகருவதாகும்.

சான்றாண்மை மிக்க மாணவர்களை உருவாக்கிய பேராசிரியர் சிவத்தம்பி தமிழ்த்துறைக்கும் நுண்கலைத்துறைக்கும் ஆற்றிய பணி மகத்தானது.

இவரின் மறைவு குறித்து பல பாகங்களிலிருந்தும் அனுதாபச் செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. இவரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந)

# லியம் பொக்ஸ்...

மற்றும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சிப்பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தவுள்ளார்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நினைவு நிகழ்வில் லியம் பொக்ஸ் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கை அரசாங்கம் போர்க்குற்றம் புரிந்ததாக பிரிட்டன் சனல் 4 அலைவரிசையினால் வீடியோக் காட்சிகள் வெளியிடப்பட்டுள்ள நிலையிலேயே இவரின் இலங்கைக்கான விஜயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருட இறுதியில் இவர் கொழும்பு வரவிருந்தார். எனினும் இறுதிநேரத்தில் இவ்விஜயம் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

# ஜனாதிபதி மகிந்தவை...

பாகிஸ்தான் பிரதமர் தெரிவிக்கையில், எதிர்வரும் நவம்பர் மாதம் மாலைதீவில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டின்போது இலங்கை ஜனாதிபதியை தான் சந்திக்க எதிர்பார்ப்பதாக கூறினார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயுள்ள இரு தரப்பு பரஸ்பர நல்லுறவுகளை மேம்படுத்தவும் மற்றும் 6 வருட இடைவெளிக்குப் பின்பு கொழும்பில் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழு மாநாட்டை நடத்துவதை வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான இலங்கை பெற்ற வெற்றி குறித்து றிசாட் பதியுதீனிடம் பாக் பிரதம மந்திரி வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். பாகிஸ்தானும் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் பல வெற்றிகளை அடைந்துள்ளதுடன் பயங்கரவாதிகளின் பிரதான தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டும் கொல்லப்பட்டும் உள்ளதாக தெரிவித்தார்.

எனினும் சிறுகுழுக்கள் நாசகார செயற்பாடுகளில் தற்போது ஈடுபட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-8)

# பான் கீ மூனுடன் ரணில்...

பதற்கு அனுமதி வழங்குமாறு ஊடகவியலாளர்கள் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதாகவும் இன்னர் சிற்றி பிரஸ் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை இஸ்ரேலிய எதிர்க்கட்சி தலைவர் கடந்த வாரம் சந்தித்த போது அந்நிகழ்வை புகைப்படமெடுக்க ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் அனுமதி வழங்கியிருந்தனர்.

இந்நிலையில் பான் கீ மூனுக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பை புகைப்படமெடுக்க ஊடகவியலாளர்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளால் அனுமதி வழங்கப்படாமை குறித்து இன்னர் சிற்றி பிரஸ் விசனம் வெளியிட்டுள்ளது அதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் சந்திப்பு தொடர்பாக அவரது அதிகாரபூர்வ இணையத்தளத்தில் புகைப்படங்களும். அச்சந்திப்பு குறித்த தகவல்களும் வெளியிடப்படுவது வழக்கமாக விருந்தபோதிலும் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பு தொடர்பில் புகைப்படங்களோ தகவல்களோ வெளியிடப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனை 5ம் திகதி ரணில் விக்கிரமசிங்க சந்திக்க விருப்பதாக ஊடகங்கள் கடந்த வாரம் செய்தி வெளியிட்டிருந்த போதிலும் இச்சந்திப்பில் சுவேந்திர சில்வா கலந்து கொள்வது குறித்து எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

அத்துடன் ரணிலின் பயணம் மற்றும் தங்குமிட வசதிகளை அமெரிக்காவுக்கான இலங்கை தூதரகமும் நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான வதிவிடப் பிரதிநிதியின் செயலகமும் கவனித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

# இலங்கையின் கொலைக்களம்...

சனல் 4 தம்மால் ஒளிபரப்பப்பட்ட வீடியோ பதிவுகள் நேர்த்தியாக ஆராயப்பட்டவை என்பதை வலியுறுத்தியுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது இரு தரப்பும் கொடூரங்களை மேற்கொண்டமையை ஆவணப்படம் தெளிவாக எடுத்துரைப்பதாக சனல் 4 மேலும் தெரிவித்துள்ளது.

சனல் 4 ஒளிபரப்பிய ஆவணப் படத்தில் உரையாடல்கள் சிங்களத்தில் பதிவாகியிருந்தன, எனவே இதுவே படைத்தரப்பினர் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் போராளிகளை படுகொலை செய்வதற்கான ஆதாரம் என சனல் 4 தெரிவித்தது.

ஆனால் சனல் 4 ஒளிபரப்பிய ஆவணப் படத்தின் மூலப்பிரதி எனக் கூறி வீடியோ தொகுப்பொன்றினை அரசாங்க ஆதரவுத் தொலைக்காட்சி ஒன்று கடந்த திங்கட்கிழமை ஒளிபரப்பியிருந்தது.

ஒரு நிமிட நீளம் மட்டும் கொண்ட மேற்படி காட்சிகளில் தமிழில் உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆவணப்படத்தில் பயன்படுத்தப்பட்ட செல்லிட பேசியில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக்காட்சிகளும் உண்மையானவை என நிரூபிக்கப்பட்டவை என சனல் 4 இன் பேச்சாளர் மரியன்பெனற்லி பி.பி.சிக்கு மின்னஞ்சல் மூலம் தெரிவித்துள்ளார்.

வீடியோ பதிவுகள் தடவியல் நிபுணர்கள் மற்றும் வீடியோ ஆய்வாளர்களால் சுயாதீனமான முறையில் ஆராயப்பட்டு உண்மையென கண்டறியப்பட்டதோடு இருமாதங்களாக ஒலியில்-காட்சியியல் நிபுணர்களால் இரண்டு தடவைகள் அவற்றை ஆராய்ந்த தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் வேண்டுதலுக்கு அமைய மேற்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அக் காட்சிகள் அனைத்தும் மிக நுணுக்கமாக விசாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதாக கூறும் சனல் 4 இன் பேச்சாளர் இலங்கையின் மூன்று குற்றச்சாட்டுக்கள் பிரித்தானியாவின் ஊடக கண்காணிப்பு அலகான ஒவ்கொம் இனால் நிராகரிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். (எ-8)

# கடற்தொழிலாளர்களுக்...

தளபதி ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியதன் பயனாக, இன்று முதல் இப் பாஸ் நடைமுறை நீக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாகவே இப் பாஸ் நடைமுறை செயற்படுத்தப்பட்டு வந்தநிலையில் பாஸ் நடைமுறையை நீக்கும்படியும் அதற்கான பொறுப்பை தான் ஏற்றுக்கொள்வதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மேற்படி உரிய தரப்பினர்களுக்கு அறிவித்திருந்த நிலையிலேயே இப் பாஸ் நாடைமுறை இன்று முதல் நீக்கப்படவுள்ளது. (எ)

மரண அறிவித்தல்

சாமிகந்தையா சதாசிவம்

தங்கோடை காரைநகரைப் பிறப்பிடமாகவும் 15, இராஜசிங்க றோட், வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சாமிகந்தையா சதாசிவம் நேற்று (05.07.2011) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

15, இராஜசிங்க றோட், வெள்ளவத்தை, கொழும்பு.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

(5305)

விரைவில்...

BABU Sir இன்

'புவியியற் கருத்தரங்கு-2011'

- புதிய, பழைய பாடத்திட்ட மாணவர்களுக்கு தனித்தனியாக நடைபெறும்.
- பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்

DMI - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(530)

மாபெரும் மலிவு விற்பனை

அவுஸ்ரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணினிகள் மலிவு விலையில் உத்தரவாதத்துடன்

INTEL PENTIUM 4- 3.0GHZ, 512 RAM,
80GB HDD, DVD ROM, 15" CRT MONITOR
KEYBOARD, MOUSE, SPEAKER

RS.13,500/= ONLY

PC MATE SYSTEMS
Computer Sales & Repair
174/16 Temple Road, Nallur

Phone :
021 222 4692
077 135 0476
077 968 9043

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.